உ

சிவமயம்.

திருஞானசம்பந்தர் பிள்ளைத்தமிழ்

ஆராய்ச்சிக்குறிப்பு.

திருவாவடுதுறை ஆதீனம்.

1953.

திருவாவடுதுறையாதீன வெளியீடு —66.

உ

சிவமயம்.

திருஞானசம்பந்தர்பிள்ளைத்தமிழ் ஆராய்ச்சிக்குறிப்பு.

குடந்தை அரசினர்கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர்,
கவிராஜபண்டித-
ஸ்ரீமான் நா. கனகராஜ ஐயரவர்கள் M. A., M.E.S.
எழுதியது.

திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்து
இருபத்தொன்றாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிகமூர்த்திகள்
கட்டளையிட்டருளியபடி

அவ்வாதீன வித்துவான்
த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளையால்
பதிப்பிக்கப்பெற்றது.

உரிமைபதிவு.

விஜய — ஆடி.
1953.

GOVE...
15 OCT 1957
MADRAS



இருபத்தொன்றாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக மூர்த்திகள்

உ

சிவமயம்.

அணிந்துரை.

இலக்கணக்கொத்து ஆசிரியராகிய ஸ்ரீ சுவாமிநாததேசிக மூர்த்திகட்கு வித்தியாகுருவாகியும், ஞானாசிரியர்களாகியும் இவ் வாதீனத்திலே எட்டாம் பட்டத்தில் எழுந்தருளி இடையறாது சிவானந்த நிட்டையில் வீற்றிருந்த ஸ்ரீ மாசிலாமணிதேசிகமூர்த்திகள் அருளிச்செய்த திருஞானசம்பந்தர்பிள்ளைத்தமிழ்ப்பதிப்பு இவ்வாதீன வெளியீடாகவந்து தமிழுலகுக்கொரு விருந்தாயமையத் திருவுளங்கொண்டருளிய **இருபத்தொன்றுவது குருமஹா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிகமூர்த்திகள் இகப்பருமிகப்பெருங்கருணை** முன்பு இருபதாம் பட்டத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ அம்பலவாணதேசிகமூர்த்திகளுடைய 2-வது குருபூசைப் பெருவிழா நாளிலே இப்பிள்ளைத்தமிழின் திருவுள்ளக் கிடக்கையை ஆராய்ந்து தமிழ்நன்மக்கட்குச் சிறுநூலுருவில் சேர்த்துதவ முந்தியும், சில பல காரணங்களால் அக்காலத்தில் அஃது இயலாததாயிற்று. எனினும், அப்பிள்ளைத்தமிழைப் பயிலுவோர்க்கு இன்றியமையாததாகிய இவ்வாராய்ச்சி அப்புத்தகத்துக் குறுதுணையாகத் தனிப்புத்தக வடிவில் இப்போது வெளியிடப் பெறுகிறது.

இனி, 'ஆராய்ச்சி' என்பது ஒரு நூலை நல்லாசிரியர்பால் நன்கனம் பயின்ற நன்மாணாக்கர்க்கு உள்ளத்தமைந்த அந்நூற் பொருளைப் பல்கால் சிந்தித்துவருங்கால் எழும் மன எழுச்சியில் வந்த பெரும்பொருளாம். நூல் பயிலாத எவருக்கும் ஒரு நூல்

ஆராய்ச்சியாற் சிறு பயனுமில்லை. நூலைப்பயின்றபின் ஆராய்ச்சி நிகழுமேயன்றி எந்தநூலையும் பயிலுமுன் ஒருவருக்கு ஆராய்ச்சி நிகழ்வதில்லை. ஒரு நூலைப்பயிலாதார்செய்யும் ஆராய்ச்சித்திறம் இக் காலத்து மாணவர்பால் எத்துணை விபரீதப்போக்கை உண்டாக்கி விட்டது என்பதை அறிஞருலகம் நன்கறியும்.

இனி, இத் 'திருஞானசம்பந்தர் பிள்ளைத்தமிழ் ஆராய்ச்சிக் குறிப்பு' விரிவுரை நிகழ்த்தவேண்டிக் குறித்த சிறு குறிப்பே ஆம். கல்விகற்கும் மாணவர்கட்குத் தாங்கள் பயிலுங்காலத்துப் பயில வேண்டிய முறையை இவ்வாராய்ச்சி தெளியவுணர்த்தும். இவ் வாராய்ச்சியின் சிறந்த போக்கையும் ஆராய்ச்சியாளரின் நுண் மாணுழை புலத்தையும் நன்கு திருவுளத்தடைத்து உடனே அச்சிடுக என ஸ்ரீ-ல-ஸ்ரீ மஹாசந்நிதானம் கட்டளையிட்டருளியது. இவ் வாதீனத்திலும், இவ்வாதீன நூல்களிடத்திலும் பழங்காலந் தொட்டே அறிஞருலகம் கொண்டுள்ள பெருமதிப்புப் பின்னும் மேம்பட இவ்வாராய்ச்சியாளர் அறுதியிட்டுரைக்கும் நல்லுரைகள் பெருமகிழ்ச்சியையே விளைக்கும் என்பதில் ஐயமில்லை. ஸ்ரீ-ல-ஸ்ரீ மஹாசந்நிதானத்தின் திருவுளத்துக்கேற்ப இவர்கள் எளியேன் விண்ணப்பத்துக்கும் இசைந்து, இடையீடின்றி நூல்யாத்தல், உரையெழுதல், விரிவுரையாற்றல், பாடஞ்சொல்லுதல், கற்றோர் பால் அளவளாவுதல், குலவொழுக்கங்குன்றாது நாட்கடனாற்றல் முதலிய அலுவல்கள் பலவற்றினிடையே இப்பணியையும் ஏற்றுக் கொண்டார்கள். இவர்கள் பேரன்புக்கு எதனை ஒப்பிடுவது? அதனுக்கு ஒப்பு அதுவே; பிறிதில்லை. '**அருங்கலைவிநோதன்**' என்றது பொய்ம்மொழியன்று என்பது இவ்வாராய்ச்சியாளரை நேரி லறிந்தவரறிவார். பிறரறியார்.

இனி, இவ்வாராய்ச்சியாளர் தாம் யாவர்? என அறியப் பேரவாவுற்றார்க்கு அவர்கள் செய்த செயலைமட்டும் இங்குக் கூறுதல் அமையும்.

உபநிடதச்செய்யுள், சூரசங்காரப்பரணி, இலங்கைப் பரணி, பெரியநாயகிபிள்ளைத்தமிழ், கம்பன்பிள்ளைத்தமிழ், திருவள்ளுவர்பிள்ளைத்தமிழ், சடகோபர்பிள்ளைத்தமிழ், சுந்தரர்புராணம், சதாசிவமுனிவர் சரிதம், மூவர்மும்மணிக் கோவை, மாங்குடியாண்டவன் நான்மணி மாலை, தேவி திருவாயிரம், ஆஞ்சநேயபுராணம் முதலிய செய்யுள் நூல்களின் ஆசிரியரும் - மறைந்தமாநகர், சிவாஜி விஜயம், கண்ணகிவழக்குரை முதலிய நாடகச்செய்யுள் நூல்களின் ஆசிரியரும் - தமிழ்ப்புலவர் வரலாறு, பாண்டியமன்னர், சோழமன்னர், விசுவநாதன், இராமாயணத்திரிவேணி முதலிய வசன நூல்களின் ஆசிரியரும் ஆகிய குடந்தைக் கல்லூரித் தலைமைத் தமிழ்ப்பேராசிரியர், புதுக்கோட்டை கவிராஜபண்டித — நா. கனகராஜ ஐயர், M.A., M.E.S. அவர்களாவார்.

இங்ஙனம்.

திருவாவடுதுறை
5—8—53.

து. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை,
ஆதீன வித்துவான்.

திருச்சிற்றம்பலம்.

எண்ண மெலாந்த னிணையடி யேறவைத் தானியம்பும்
வண்ண மெலாந்தன் பெயராக வைத்தனன் வாருடலிற்
பண்ண லெலாந்தன் பணியாக வைத்தனன் பண்ணவர்சூழ்
அண்ணல்பஞ் சாக்கர வேந்த லருளுமி தற்புதமே.

தேசிக நாதன் சிவஞான தேவன்செங் கைத்தலமுன்
வீசினின் றாடிய வம்பல வாணன் வியனுலகம்
பேசிய பஞ்சாக் கரவன் பிறங்கருட் டாண்மலரைக்
கூசினின் றேத்திய மாதவத் தார்க்கென் குறையுளதே.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

முகவுரை.

திருவாவடுதுறையாதீனத்தில் இருபத்தோராம் பட்டத்தில் வீற்றிருந்தருளும் **ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பண்டாரச்சந்நதிகள்** விருப்பத்திற்கிணங்க ஆதீனத்தின் இருபத்தொன்பதாம் வெளியீடாகத் தமிழ் உலகில் நுழைந்துள்ள **திருஞானசம்பந்தர் பிள்ளைத்தமிழ்ப்** பிரதி ஒன்றைத் திருவருள்வசத்தாற்பெற்ற சிறியேன், அதன் பதிப்பாசிரியர் ஆதீனப்புலவர் திரு.மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் கருத்துக்கிணங்க ஒரு **ஆராய்ச்சிக் குறிப்பு** எழுதும் துணிவு பிறந்தேனாய், அதன் அருமை பெருமைகளை உள்நுழைந்து பன்முறை பார்த்துத்துய்க் கும்பேறுபெறாத நிலையிலே அன்பர் பணிசெய்ய என்னை ஆளாக்கிவிட்ட அன்பின் உருவன் திருவருளே உறு துணையாகக்கொண்டு சைவசாத்திரப்பயிற்சியோ, சைவ நூல் நுண் பொருள்களின் ஊடாட்டமோ சிறிதும் பெறாதேனாயினும், அன்புத்தமிழ்ப்பணி செய்யும் உரிமை அன்புக்கடலான இப்பொருந் திருமடத்தின் சாயையிற் கூட அண்டாத எனக்கும் வாய்த்ததே! என்ற உணர்ச்சி மேலீட்டால் மனத்தில் எழுந்தவண்ணம் மெல்லிய சிறிய சொற்களால் சில எழுதி வெளியிடத்துணிந்த இத்திருப் பணியைத் தமிழ் உலகம் அன்பால் ஏற்று என்பால் அருள்பாலிக்க வேண்டுகின்றேன்.

திருக்குடந்தை
விசய-மிதுனரவி.

நா. கனகராஜன்.

"கயிலாய பாரம்பரையிற் சிவஞான போதநெறி
காட்டும் வெண்ணெ
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பாநு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ் குருநமச்சி
வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் றிருமரபு நீடூழி
தழைக மாதோ."

— ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தர் பிள்ளைத்தமிழ்

ஆராய்ச்சிக் குறிப்பு.

ஆழித் தண்டுறை அன்று மிதந்தசீ
காழிச் சண்பையர் காவலன் கௌணியன்
வாழித் தண்டமிழ் வாக்கமு தம்தரு
காழிப் பிள்ளை கழறலைச் சூடுவாம்.

பிரமபுரம் முதலிய பலபெயர் பூண்ட சீகாழித் திருத்தலத்தே சைவமும் தமிழும் ஒருங்கு இயற்றிய தவத்தின் பேறுகத் திருவவதாரம் செய்தருளிய திருஞான சம்பந்தமூர்த்திகளின் திருவருளை எளிதில் கைவரப் பெறும் கருத்தானே அருள்நெறியிற் பழுத்த ஆவடுதண் டுறைத் திருமடத்தின் அதிபருள் எட்டாவது பட்டத் தில் எழுந்தருளியிருந்த திருவருட்செல்வர் மாசிலாமணி தேசிகமூர்த்திகள் அருளிச்செய்த பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தம் ஒன்று இந்நாளைத் தமிழ் மக்கள் சுவைத்து இன்புறுமாறு வெளிப்போதருகின்றது.

பகழிக்கூத்தர் இயற்றிய திருசெந்தூர்ப் பிள்ளைத் தமிழ்க்கு ஒப்பதும் மிக்கதும் இல்லை என்று தமிழ்ப்புல வர் கருதியகாலம் ஒன்று இருந்தது. தருமையாதீனத்துச் சிவத்தவம் பெற்ற காசிவாசி ஆதிகுமரகுருபர சுவாமி கள் திருவாக்கின்று எழுந்த பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தங் களை இளைஞர் எல்லாரும் ஓதியே ஆதல்வேண்டும் என்று கருதிய புலவரும் உளர். துறைசை ஆதீனத்தின் சோற் றுச் செருக்கால் பல்லாயிரம் கவிதைகளைக் கடல்மடை

திறந்தாற் போலத் தமிழ்மகளுக்குச்சூட்டிய திரிசிர புரம் மகாவித்துவான் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை அவர்கள் இயற்றிய பிள்ளைத்தமிழ்ப்பிரபந்தங்களை (அவற்றுள் சிறப்பாகச்சேக்கிழார்பிள்ளைத்தமிழை) நோக்கிய பிறகு இப்பிரபந்தம் இத்துணைச் சிறப்புடையதா என்று எண்ணும் அறிஞரும் உளராயினர். பின்னுளிலே எத்துணையோ பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தங்கள் பிறந்தன. அவையெல்லாம் இப்பிள்ளைத்தமிழை ஒருதுலைத்தட்டில் இட்டு மற்றொரு துலைத்தட்டில் அடுக்கப்பெறும் பேற்றுக்கும் தகுதிபெறா என்று துணிந்து கூறலாம்.

திருஞான சம்பந்தப் பெருமானைக் குழவியாகப் பாவித்து இயற்றப்பெற்ற இப்பிள்ளைத்தமிழ் எளியநடையில் அமையவில்லை. வடமொழியை மிகுதியாகக் கொள்ளவும் இல்லை. பிள்ளைத்தமிழ் இலக்கணம் நன்கு தெரிந்த பெரியோரால் இயற்றப்பெற்றிருப்பதைத்தன்போக்கால் ஆங்காங்குவிளக்கிக்கொண்டிருக்கின்றது.இப்பிரபந்தம் சம்பந்தர் வாக்கையே நினைப்பிக்கவல்ல நடையுள்ளது. சிலபுதுமைகளைத் தன்னுள் அடக்கிக் கொண்டிருப்பது.

பிள்ளையவர்கள் பாடிய சேக்கிழார் பிள்ளைத்தமிழில் அக்காலப் புலமைப் பெருமக்கள் அதற்குமுன் காணாத ஒரு புதுமை கண்டு மருண்டு தலையசைத்தார் என்று கூறக் கேட்டிருக்கின்றோம். அப்புலவர் பெருமான் வகுத்த புதுமை பிறர்க்கு மருட்கை விளைப்பினும் திருவாவடுதுறை மடத்தில் இருந்து ஏடுகளையெல்லாம்முறைப்படி கையாண்டு பயின்ற அவர்க்குப் புதுமை எனவே தோன்றியிராது. அவர் தமக்கு முன் சைவநெறிபிழையாதே பிள்ளைத்தமிழ் யாக்கும் முறையைக் கற்பித்தருளிய இத்தவச் செல்வரைத் தம் மனக்கண்முன் நிறுத்தி வழுத்தியே சேக்கிழார் பிள்ளைத் தமிழினைப்

பாடியிருக்க வேண்டும். இன்று நாம் காணும் பேறு பெற்ற இச்சம்பந்தர் பிள்ளைத்தமிழை அன்று அப்புலவர் பெருமான் ஏட்டுருவத்தில் நன்கு பயின்ற பயனே ஸ்ரீ சேக்கிழார்பிள்ளைத்தமிழாக எழுந்தது என்று கூறுவது சிறிதும் மிகையாகாது.

சங்கத்துச் சான்றோர் இயற்றியதாக வழங்கும் பன்னிருபாட்டியலிலும் அதன் வழி பற்றிப் பிற்காலத்து எழுந்த பாட்டியல் நூல்களிலும் பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தத்திலே காப்புப் பருவத்தில் இன்ன இன்ன கடவுளரைப்பாடுகஎன்றவிதிவகுக்கும் இடத்தே திருமாலுக்கே முதற்றானம் தரப்பெற்றுளது. திருமால், காப்புக் கடவுள் ஆதலால் காப்புப் பருவத்தே முதல் நிலைக்கு உரிமை பூண்டான். விநாயகன், முருகன், சிவபிரான் இறைவி முதலிய பிற தெய்வங்களையும் அப்பருவத்தே வாழ்த்தக்கூறிய இலக்கணம் உடையார் சத்தகன்னியரையும் முப்பத்துமுக்கோடி தேவரையும் வாழ்த்துதல் கடன் என்றே கற்பிப்பாராயினர். இக் கற்பனைகளையெல்லாம் முறையே நூல் வாயிலாக அறிந்து வைத்தும் இந்நூலாசிரியர் தம் திருவுள்ளத்தே இறைவன் இருந்து இயக்குவித்தவண்ணம் காப்புப்பருவம் அமைத்திருக்கின்றார்.

இப்பருவத்தே முதற் செய்யுள் தோணிபுரநாதரையும் அவர் இடங்கொண்ட திருநிலை நாயகியையும் ஒரு சேர வழுத்துகின்றது. முதற் செய்யுளில் திருமாலை வழுத்துதல் வேண்டா என்ற சைவநெறித்துணிபால் இயற்றும் வாழ்த்து இருவரும் ஒருவராகிய உருவை வழுத்தியது, அதுபிள்ளையார்க்கு இருவரும் ஒருசேர வந்தருளி ஞான போனகம் தந்த திருவருட் சிறப்பைக் குறிப்பிப்பதாம். அவ்வரலாறே அச் செய்யுளில் அழகுபெற அமைந்திருப்

பதைநோக்குவார் இவ்வாழ்த்தின்பொருத்தத்தைஏற்றுக் கொள்ளாதிருக்க இயலாது. இப்பிள்ளைத்தமிழ்க்குரிய தெய்வக்குழவி பாலருவாயர் ஆதலாலும் அவர் திருவாய் அமுதம் தமிழ்மக்கள் பெற உதவியது இப்பால் தந்த திருவருட்செயலே ஆதலாலும் காப்புப்பருவத்து முதற்கண் இடம்பெறற்குரிய தெய்வம் இவ்விருமை யான ஒருமையே என உய்த்துணரலாம். இப்பரு வத்தின் இரண்டாம்செய்யுளில் திருநீற்றுக்காப்பு வழுத்தப்பெறும் புதுமையைக் காண்கிறோம். இச் செய்யுள்காப்புப் பருவ அமைதியைச் சற்றேகடந்து நிற்கிறது. பிள்ளைத்தமிழ்க்குரிய குழவியைக் காக்க என்று ஒவ்வொரு செய்யுளிலும் தெய்வதங்களை வழுத்து வதே இப்பருவத்துக்கு உரியமுறை என்று இலக்கண முடையார் அமைத்துள்ளார். அங்ஙனம் இருக்கவும் இச் செய்யுள் வேறு வகையிலே காப்பு வகுக்கின்றது. இனி, சம்பந்தப்பெருமான் திருநீற்றுக்காப்பாலியற்றியஅருட் செயல்கள் சில முதற்கண் இச்செய்யுளில் அழகுற அமைந்துள்ளன. அமணர் இரவில் மடத்தில் இட்ட எரியை வழுதிக்கு இடும் வண்ணம் "செய்யனே திருவா லவாய் மேவிய ஐயனே, அமணர் கொளுவும் சுடர் பை யவே சென்று பாண்டியற்கு ஆகவே" என்று அறத்தின் நிலை நிறுத்தக்கருதிய திருவருட்குறிப்போடு பிள்ளையார் அருளிய திருப்பதிகத்தின் திருவுள்ளம் முதற்கண் எடுத்து ஆளப்பட்டுள்ளது. ஏட்டில் தீட்டி எரியில் இடக்கடவது எனஅவர் இட்ட உரை தீக்குத் தோற்கும் வண்ணம் தமது இனிய தமிழ்ப் பனுவல் பனிமலர் ஒத்து எழவும் நாட்டைச் சூழ்ந்திருக்கும் பரவைபோற் பெரு கிய வையைப் பேராற்றிலே வெற்றுடல் மேற் புல்லை மூடும் அமணர் இட்ட பழிமொழி பொய்பட எதிர்வழி ஏறிச் சென்ற தமதுதிருமொழி மெய்த்திடவும் விளக்கிய அருட்செயல் அடுத்துவருகிறது. ஒரு பவுத்தன் சிரம்

உருளப்பாடியருளிய அற்புதம் அதன்பின் வருகிறது. திரு மயிலாப்பூரில் அரவு கடித்து எச்சில் ஆகிய என்புப் பொதி அடக்கிய குடம் பூம்பாவையின் வடிவைத் தரு மாறு செய்ததும் திருவாலவாயில் அமண விலங்குகள் அடையப் புகுந்த வேட்டைக் காட்டை விரகினால் வளைத்து அழித்தருளிய திருவருட்செயல் விளக்கமும் பிறகு வருகிறது. இத்தனை அற்புதங்களும் செய்த தமிழ்க்குழவி அரனைத்தனது விரற்கமலமலரால் சுட்டிக் காட்டி அழுத தமிழ்க்குழவி என்று தெளிவாக உரைக்கப்படுகிறது. இக்குழவி திருநீற்றுக் காப்பைக் கொண்டு உலகம் காக்கவந்த திருக்குழவி ஆதலால் இக்குழவியை அத்திருநீற்றுக்காப்பு முன்வந்து காப்ப தாக என்று வழுத்துவது பொருத்தமென ஆசிரியர் கருதினரல்லர். கூன்பாண்டியன் உளக் கூனும் உடற் கூனும் நீக்கி அருளிய திருநீற்றுக்காப்பை இக்குழவியே அருளியதாதலால் எவ்வண்ணம் இக்காப்பினை அமைப் பது என்ற சிந்தனை எழுந்தே திருநீற்றுக்காப்பு இவ் வருட்குழவி திருநெற்றியின் வாய்க்கச் சேர்க்கப்படுவ தாக என்று கூறி அமைகின்றார். சம்பந்தப்பிள்ளையார் திருநெற்றியில் நிற்கும் திருநீற்றுக்காப்பு அன்றுசைவம் வாழவைத்த திருக்கோலக்காப்பாதல் விளக்கமாம். அடுத்த செய்யுள் மன்றுளாடிய பெருமான் அருகத் திரளைக் கழுவேற்றும் தமிழ்ப்பெருமானைக் காக்கஎன்று முறைப்படி அமைந்துள்ளது. சிற்சத்தியை வழுத்தும் அடுத்த செய்யுளில் சம்பந்தப்பிள்ளையார் சிவராகவன் எனப்படுகின்றார். சிவத்தின் அன்பே உருவாக உடை யார் என்று அத்தொடர்மொழி விளக்குவது. முகில் ஆர்த்தகோன் கூனைப்போக்கிய மதுரவாசகன், ஆண் தாலத்தாற் பழம் அருள்புரியும் மாதவன், அழல் வேட் டல் மூன்றாக முட்டாது தொழில்கருது சதுர்வேதியன், அருள்நீற்றை யாம்காணக்காட்டிய கமலகரநாயகன்,

கலியைக்கடுகி அடுசேவகன், கவுணியர் குலாதிபன் அமண் வேட்டைக்குப் போந்தான் முதலிய பல அழகிய தொடர்களால் உள்ளம் உருகி உரைக்கின்ற சம்பந்தர் திருவருட்சிறப்பின் பெருமைகள் இங்கு நினைக்கத் தக்கன. இங்கு ஒவ்வொரு தொடரும் அடியவர்க்கும் அப்பெருமானுக்கும் உள்ள தொடர்பை நன்கு விளக்க அமைந்திருப்பது உய்த்துணர்ந் தின்புறத்தக்கதாம். இச் செய்யுளும் இக்குழவியைச் சிற்சத்தி காக்க என்று பழையமுறைபற்றி முடிந்துளது. விநாயகக் கடவுளை வாழ்த்தும் செய்யுளில் அர ஒலி வளர முத்து உற்ற நீழல் வரு வித்தகன் திசைதிசையில் அத்திக்குமாறு முக்கட் கடாமலை அருள்க என்று முடிகின்றது. அத்திக்குமாறு என்பது ஒரு புதுச்சொல்லாம். அது மெய்ப்பொருள் விளக்கம் அருளும் வண்ணம் என்ற பொருள்தர அமைந்துள்ளது. அர்த்தம் மெய்ப்பொருள், அர்த்தித் தல் அதனை விளக்குதல் என்று அறியவேண்டும். முருகப்பிரானைப் பாடும் செய்யுள் இப்பிள்ளைத்தமிழ்த் தலைவர் அடியவர் கூட்டத்துக்கெல்லாம் உரிய துணை என்ற உண்மையை விளக்குகின்றது. இப்பருவத்தில் மன்றுளாடிய வள்ளல் இருநாழி நெல்லைக்கொண்டு குடி வாழ்ந்த இறைவி முக்கனியும் அமுது செய்த முக்கட் கடாமலை அமரர் சிறை வெட்டிவிட்ட அயிற்பெருமான் என்ற நால்வரே பண்டை முறைபற்றி இக்குழவியைக் காக்க என்று வழுத்தப்பெற்ற தேவர் ஆவர். இனிவரும் காப்புச்செய்யுள் ஒவ்வொன்றும் ஒரு புதுமை விளக்க அமைந்துளது. தொடக்கத்தில் தோணியப்பரும் திருநிலை நாயகியும் ஒருங்குவைத்து வழுத்தப்பட்ட உண்மை முதற்கண் விளக்கப்பட்டது. பதினொரு செய்யுட்கள் அமைதல் வேண்டும் என இலக்கணமுடையார் வகுக்கும் இக்காப்புப் பருவத்தே திருநீற்றுக்காப்பு இரண்டாம் காப்பாக அமைந்ததுபோல வேறுசிலபுதுமுறைக்

காப்புகளும் இனி வருகின்றன. காப்புப்பருவத்தில் சிவ பெருமானுக்கு ஒருசெய்யுளே இருப்பது முறையாயினும் இங்கு முதற் செய்யுளும் மூன்றாம் செய்யுளும் பத்தாம் செய்யுளும் சிவத்தை வழுத்த அமைந்துள்ளன. ஆசிரியரது சிவநெறித்துணிபு முதல் இடை கடை என்ற மூன்று இடங்களிலும் இப்பருவத்தே விளக்கம் ஆதல் வேண்டும் என்பது அவர்கள் குறிப்புப்போலும். முதற் செய்யுளிலே சம்பந்தத் தமிழ்க் குழவிக்குச் சிவஞான அமுதம் அருளிய அம்மையப்பரை வழுத்திய ஆசிரியர் ஏழாம் செய்யுளில் சிவஞானசம்பந்தம் பெற அமைந்த அவ்வருட்செயலை மறுவலும் நினைவு கூர்ந்து அத்திருவிளையாடல் நிகழ இடமாக இருந்த பொய்கையை வழுத்துகின்றார். அச்செய்யுளில் நாண்மலர்ச் சிறடிப்பேதையார் முகிழ்முலைத் திருஞானம் பொழிந்த பால்மணம் தன்மணம் ஆக்கிய பொய்கைக்கரை ஐயனைக் காட்டிநின்று அழுதவன்தனைக் காக்க என்று மனம்உருகிப் பாடுகின்றார். அசேதனமான பொய்கை சேதனருட் சிறந்த சிவஞானப் பிள்ளையைக் காக்குமா என்ற ஐயமே இப்பெரியார் உள்ளத்தில் எழாமை இங்கு நினைத்து இன்புறத்தக்கது. அவன் அருள் கலக்கும்போது அசேதனமும் சேதனம் ஆகும்; அவன் அருளை உதவ வல்லதும் ஆகும் என்ற உண்மையை அறியாதவர் ஆத்திகருள் இல்லையன்றே. வாயிற் படிக்கல்லுக்கும் சிவவுருவம் தாங்கிய கல்லுக்கும் அசேதனத் தன்மையில் வேற்றுமையில்லையென்றே முகத்துக் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்கள் நினைப்பாராயினும் அகத்துக் கண் கொண்டு அங்கு அருள் விளக்கம் பொழிவதைக் காண்பாரும் உலகத்தில் உண்டு. அங்ஙனமே இப்பொய்கையும் காப்புப்பருவத்தே வழுத்தற்குரிய தெய்வத்தன்மை பெறுவதாயிற்று. தோடுடைய செவியன் என்றபதிகம் பாடுமுன் இறைவனைச் சுட்டிக்

காட்டி அழுத ஐயன் எமக்கு அருளியது இதுவே என்று கூறுவாராய் இச் செய்யுளில் 'இழிந்த தேவரை யாமெலாம் தேவரென் றேத்திய தடுமாற்றம் அழிந்துபோம் வகை ஐயனைக்காட்டி நின்று அழுதவன்' என்ற நெடுந் தொடர் மொழியை அழகுற அமைத்துள்ளார். அடுத்த எட்டாம் செய்யுள் பன்னிருதிருப்பெயர் பூண்ட பழம் பதியை வாழ்த்துவதாக அமைந்துள்ளது. அத்திருப்பதி திருஞானசம்பந்தப் பெருமானைப் புரப்பதாக என்று தெளிவாக உரைக்கிறார். அங்கு அமணை அழித்தான், கூனைஒழித்தான், விடம்தீர்த்தான், தலை விழப்பார்த்தான், மதுரையில் வென்றான், அழகுற நின்றான், மறைவிளங்க வந்தான், திருநெறிதந்தான், திருமுலையுண்டு அழுதான், கண்டு தொழுதான், திருநீறுபுனைந்தான், கலியை நலிந்தான், தேவர்தொழற்கரியான், பரவ உரியான், திருஞானசம்பந்தன் என்று பிள்ளையாரைப் புகழ்ந்து அடுக்கிய தொடர் ஒவ்வொன்றும் ஒவ்வொரு திருக் கோலத்தை விளக்க அமைந்திருப்பது அறிஞர்க்கு விளங்காதிராது. ஆற்றொழுக்காக அமைந்த இச் செய்யுளில் சம்பந்தர் தண்டமிழ்ச்சிறப்பு ஒவ்வொரு செயலாலும் விளக்கப்பட்டது. இத்தகைய சிறப்புடைய தெய்வக்குழவியைப் பிரமபுரம் முதலிய பன்னிரு பெயர் பூண்ட திருப்பதி புரப்பதாக என்று துணிந்து உரைக் கின்றார். பதியும் புரக்கவல்லதோ என்பார்க்கு மூர்த்தி தலம், தீர்த்தம்முறையாய்த்தொடங்கினர்க்கேவார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே என்ற அருள் வாக்கு உரிய விடை பகரும். மூர்த்தியை முதற் செய்யுளில் பாடினார். தீர்த்தத்தை ஏழாம் செய்யுளில் இசைத் தார். எட்டாம்செய்யுளில் தலத்தைப் பொருத்துகின்றார், காசி என்று சொன்ன அளவில் முத்திவரும் எனவும் திருவண்ணாமலை என்று நினைத்த அளவில் முத்திவரும் எனவும் நம்புகின்ற ஆத்திகர் இனத்தில் தலைமணியான

இவ்வாசிரியர் இப்பிள்ளைப்பெருமானைக் காக்கத்தக்க சிறப்பு இத்திருப்பதிக்கு உண்டு என்று உணர்ந்தே கூறுகின்றார். அதற்கு அமைந்த காரணமும் குறிப்பிடு கின்றார். பல அமரர் நிலைகுலையப் பிரளயம் கோத்து எடுத்த பரவையில் உலகு அழுந்தவும் தான் அழுந்தாது மிதந்த பழம்பதி ஆதலால் அது இப்பிள்ளையைக்காக்க வல்லதே என்று உரைக்கத்துணிகின்றார்.

அடுத்த செய்யுளில் அப்பிள்ளைப் பெருமான் திரு வாய் மலர்ந்தருளிய திருப்பதிகத்தையே ஒரு தெய்வ மாகப்பாவித்து அத்தெய்வம் இக்குழவியைக் காக்க என்றுகூறுகின்றார். உலகமெல்லாம் உய்யும்பொருட்டு அருணெறித்தமிழ் மறையை முதல்முதலாக அருளிச் செய்த பெருமை சம்பந்தப்பிள்ளையார்க்கே உரியதாம். காரைக்கால் அம்மையார் இப்பிள்ளையார்க்கு முந்திய காலத்தே இருந்தாராயினும் திருநெறித் தமிழ்த்தொகை யில் அவரது திருப்பாட்டுப் பதினோராந்திருமுறைக்கே உரியதாயிற்று. இத்தமிழ் மறைக்கண் அன்றும்இன்றும் நம்பியாண்டார் நம்பி வகுத்துக்கொடுத்த வண்ணம் முதற்கண் வைத்துப்போற்றப்படுவது சம்பந்தர் திரு வாக்கே ஆகும். அத்திருப்பதிகத்தொகுதி எத்தனையோ அற்புதங்களை இயற்றி உலகமக்களை உய்யக்கொண்ட தாம். ஆதலின், அதன் ஏற்றத்தையும் இப்பருவத்தே உரைப்பது பொருத்தம் என்றே இவ்வாசிரியர் துணிகின் றார். பிறர் கண்டு மகிழ ஓவியம் அமைத்த கலைஞன் அதனை அமைக்கும்போதே தன் உள்ளத்தில் அமுதவெள் ளம் பொங்கியெழக்காண்பது உண்மையாம். அழகுக் கொள்ளையாகச் சிற்பத்தை அமைப்பவன் பிறர் பெறும் இன்பத்தினும் சிறந்த இன்பத்தைத் தன்னுள்ளத்தே காண்கின்றான். பசுக்களும் சிசுக்களும் பாம்புகளும்

தலையசைக்க இசை பாடவல்ல கலைஞன் தன் உள்ளத்தே அமுதம் ஊற்றெழக் காண்கின்றான். அக்கலைஞர் பெறும் இன்பம் உள்ளத்தால் உணரத்தக்கதேயன்றி இப்படி இருக்கும் என்று உரையால் வெளியிடல் அரியதாம். அவ்வண்ணமே உலகத்தையெல்லாம் அருநெறியில் நடாத்தக் காழிப்பிள்ளை திருநாஇசைத்த திருப்பதிகத்தொகை உலகமக்கள் அனைவர்க்கும் நன்மை பயந்ததே அன்றி அவர்களுக்கும் உள்ளம் உருகும் நலத்தை அன்றே விளைத்தது. அப்பதிகத்தொகைதானே இப்பிரபந்தத்தில் குழவியாக யாம்பாவித்துப் பாடும் பிள்ளைப் பெருமானைக் காக்க எமது வேண்டுகோளால் முன்வரவேண்டும் என்று வேண்டுவார்போல இங்ஙனம் அமைத்திருக்கின்றார். ஆண்டவனுக்கு நாம் அவன் அருளிய நன்னீரை ஆட்டி அவன்அருளிய மலர்களையே தூவி அவன் அருளிய போனக வகைகளையே நிவேதிப்பது அன்றும் இன்றும் உள்ளது தானே! நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க என்று அவனையே வாழ்த்தவும் துணிந்த திருவாக்கும் உண்டே!! அதுபோலவே இதுவும் ஆம். பத்தாம் செய்யுள் காழிப்பதிக்கே சிறப்புதவும்திருக்கோலம் பூண்டசட்டைநாதரைத்திருஞாயிறு காணி என்ற திருப்பெயரால் வழுத்துவதாம். இச்செய்யுளில் காழியுள் ஞானனை ஞாயிறுகாணி அருள்கூர்தரும் என்ற சொற்களாற் காப்புரைத்த புதுமையைக் காண்கின்றோம். பதினோராம் செய்யுள் இப்பருவத்தே பிறர் எவரும் துணியாத ஒரு தனிப்புதுமையை விளக்க அமைந்ததாம். காப்புப் பருவத்தில் வழுத்தப்பெற வேண்டும் என்று பாட்டியல் இலக்கண நூலோர் வகுத்த பிற தெய்வம் எல்லாம் ஒரு குழுக்கொண்டு இச்செய்யுளில் வருகின்றன. வந்தும் அவை பெறும் நிலை நினைத்தற்குரியது. அவை ஒன்றும் இக்குழவியைக் காக்கும் உரிமைபெற்று வரவில்லை இக்குழவியைக்காக்க

என்ற வாய்பாட்டால் வேண்டப்படவும் இல்லை. திருஞானசம்பந்தப்பிள்ளையார் பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தம் பெறத்தக்கபருவத்தே இறைவன் அருளிய திருமுத்துச்சிவிகையில் அமர்ந்து சிவச்செல்வம் நாடெங்கும் வழங்கத் திருவுலாவருகின்ற உண்மையை ஆசிரியர் மறந்தார் இல்லை. ஆதலால் இச்செய்யுளில் உள்ளம் உருக அமைக்கும் புதுமை இவ்வாசிரியரைப் பிள்ளைத்தமிழ்த் துறையில் புதுமைக்கெல்லாம் தலைவர் என்றே துணிந்து புகழ நம்மைத்தூண்டுகின்றது. அவர் வாக்காலேயே அதனைக்காண்போம் " அரத்துறையின் அளித்ததிருமுத்தின் சிவிகை மிசை அசைய வரும்மணியைச் சேவித்து அங்கு உடன் வருவார், செங்கமலத்து அயன்மால் திசை யெண்மர் அருக்கர் பன்னிருவர் உருத்திரர் பதிெனொருவர் மறைநூற் கருமத்து மருத்துவர் இருவர் எழுவர் கன்னியர்" என இங்கு உரைக்கப்படும்தேவர் பெற்ற பேறு இதுவே. இத்தேவர் எல்லாம் இப்பிள்ளைப் பெருமான் திருவுலாவில் மெய்காவலர் போல முன்னும் பின்னும் இருபக்கமும் கைகட்டி நடக்கும் திருவுடையாரே யன்றி அப்பெருமானைக்காக்கும் திறம் பெற்றாரல்லர் என்றேதுணிந்துரைக்கின்றார். இதுவும் ஒரு வகை காப்பே ஆதல் உய்த்துணரத்தக்கதாம். மற்றைத் தேவரை என்றும் வணங்கக் கூடாதுஎன்றே ஒற்றைத் தேவனைச் சுட்டிக்காட்டிய வெற்றிக் குழவியைக் காக்கும் பேறு இத் தேவர்க்கு வாய்ப்பது எங்ஙனம்? 'என்ற கருத்தாலேயேஇம்மெய்காவல் முறையை அமைத்தருளினர். இப்பிரபந்தத்தில் காப்புப் பருவம் பல்லாற்றானும் சிறந்து விளங்குவதைத் தமிழறிஞர் நன்குபயின்று தெளிந்து உள்ளக்கிழியில் ஏற்றி உணர்ந்து இன்புற வேண்டும்.

இனி, மற்றைப்பருவங்களில் உள்ள பொற்பமைதி களைச் சற்றே நோக்குவோம். செங்கீரைப் பருவம் குழவியின் தலையசைப்புடன் திருவாய் மழலை கேட்கும் பருவம் ஆதலின் இப்பருவத்து முதற் செய்யுளில் சம்பந்தப் பெருமானாகிய தெய்வக்குழவி மதுரவாசக என விளிக்கப்பட்ட அழகு நினைந்து இன்புறத்தக்கது. இவ்வழகிய விளிமொழிக்கு அடைமொழிகளாக அமைந்த சொற்றொடர்கள், ' கூடலிற் சமண்மூகர் திருமடத்திட்ட எரி கொற்றவற்பற்ற மொழிந்ததும், மங்கையர்க்கரசியார் துயரம் தவிர்த்ததும் ஆகிய செயல்களை விளக்குவன. சிவஞானசம்பந்தர் மதுர வாசகம் அன்றோ இவை எல்லாம் செய்த மருந்து என நினைப்பிக்கின்றார். இப்பருவத்தே சம்பந்தப்பெருமான் முத்துப்பந்தருக்கு உவமை அமைக்க முயலும் அழகு சிந்திக்கத்தக்கதாம். ஓராயிரம் கதிர்கள் உடைய சூரியர் உடனிருந்தனைய ஒளிசூழ் பருமணிக் கால்களுள்ள பலகோடி வெண்டிங்கள் பாரித்த தனைய தரளப்பந்தர் என்று மனம் உருகி விளக்குன்றார். பட்டீச்சுரத்துக்கு அமைந்த இத்திருவுலாக் கோலச் சிறப்பை இச் செய்யுளில் உவப்போடு உரைக்கின்றார். மூன்றாம் செய்யுளில் மைஇதழ்க்குவளையும் கொடிவள்ளையும் தளவும் வண்குமிழும்மாடமாளிகைதொறும் ஒரு செய்ய தாமரையில் மலரும் சீகாழி நாடு என்று அமைத்த வருணனை இடைக்காலப் புலவர் போக்கில் நன்கு ஊறியிருக்கும் ஆசிரியர் புலமைத் தன்மையைச் செவ்வனே விளக்குகின்றது. சம்பந்தப்பிள்ளையாரைத் முருகன் திருவவதாரம் என்று கூறுவார் சிலர். அங்ஙனம் கூறுதல் தகாது என்பார் சிலரும் சைவச் செல்வருள் உண்டு. அருணகிரிநாதரும் பகழிக்கூத்தரும் முருகன் அவதாரம் என்றே பாடினர். இவ்வாசிரியர் சித்தாந்த சாத்திரத்தில் ஊறிய மனப்பண்பு உடையரே ஆயினும் பிறப்பிலாப் பெருமாற்கும் பிறப்புரைக்க மனம்பொருந்

தும் இனத்தோடு சேர்ந்துகொண்டு 'பரமர் அருள்பெறு புதல்வ' என்ற தொடர்மொழியை அமைத்திருக்கின்றார். இங்குப் புதல்வன் என்னும் சொல் குழவிப் பருவத்தைக் குறிக்கும் அளவிற் பயன்படுவதென்று சொல்ல இயலாது. ஐந்தாம் செய்யுளில் சிவபரத்துவம் தெளிய உணர்த்தும் குறிப்பானே 'கஞ்சாசனத்து அரிவை பிரியாத தாமரைக் கண்ணனும் அக்கண்ணன் உதரத்துக் கமலாசனத்தில் வருதிசைமுகக் கடவுளும் காணமல் நின்று கதறினர் என்ற பழஞ்செய்தியை உரைத்தார். அவ்விருவரும் சிவபரத்தின் அடிமுடிகளையேகாணுராய்க் கதறியது ஒருபுறம் இருக்க இச்சிறுகுழவி பிஞ்சுமதி முடிக்கும் சடைப்பெருமானை மலைப்பேதையோடு கண்டருளி வேதம் நிலையிடப் பிறந்தருளிய சிறப்பை நன்கு விளக்குகின்றார். வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்கப் புனிதவாய் மலர்ந்து அழுத குழவியைப் பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தத்தின் நாயகனுக அமைத்துப்பாடும் பேறு பெற்றுளாராதலால் அதனை உலகம் அறிய உணர்த்துகின்றார். சம்பந்தப்பிள்ளையாரை மனம் உருகிப் பலமுறை சிவபிரான் மைந்தன் என்றே இப்பருவத்தில் அழைக்கின்றார். "உரிமையர் வேண்டிய கதிபெற வீந்தவன் மைந்தா" எனவும் சரப அவதாரம் எடுத்த சிவபிரான் மைந்தன் என்று குறிப்பு விளங்கும்படி "அயல் உரை தாங்கிய சிறுவனேடுஅன்று அறையும் தூணம் கீறிய அவன்உடல் தான் புடையதனிடை போழ்ந்து அணையும் கோள் துஞ்சாது வயவலி தான் சொலும் அளவினில் ஆங்கவன் வெங்கோபம் தீர வயிறு எரி தோன்றிட மிசைகொடு போழ்ந்தவன் மைந்தா" எனவும் "இலங்கேசன் பாட எறிபடை ஈந்தவன் மைந்தா" எனவும் வரிவளை யேந்தியும் இமையவர் வேந்தனும் நின்றார் கண்டாரும் மடிபிணம் ஆம்படி பொருத பிரான் திருமைந்தா எனவும் ஒரு பகல்

சங்கு ஆளும் பாணி வடகிரி சூழ்ந்து அலை கடை கயிறு ஆம் பணி வன்காளம் கால அருள்புகல் காண்கிலம்வழி அடியோம் பரம் என்றே வந்தார்கள் அமுது உண்ண ஆங்கு எதிர்விடன் நுகர்வான் திருமைந்தா எனவும் தெள்ளத்தெளிய இப்பாட்டுடைத்தலைவர் சிவபெருமான் திருக்குமாரனே என்று கூறத்துணிகின்றார்.

தாலப்பருவத்தே சமணப்பசு எண்ணாயிரம் வந்து உட்படு தோழத்திடையே கனிஞானப்புலியொப்பாய் என்ற உவமை நயம் சிந்தித்தற்குரியது. சமணர் குணத்தாற் புலிபோல்வர். சம்பந்தப்பிள்ளையார் சிவனே துணையென்றுகொண்ட சத்துவகுணசம்பத்தாற் பசுவே போல்வார். உண்மை அங்ஙனம் இருக்கவும் சமணர் தமது வாதத்தால் தாமே மடிய நேரிட்ட வரலாற்றை உய்த்துணர்ந்து அறிவினால் அடையத்தக்க பயன்பெறாத மனிதப்பிறப்பு பசுப்பிராயமே என உணர்த்துவாராகி அவர்களைப் பசுக்கள் ஆக அமைத்து அக்கூட்டத்தைப் பசுத்தோழம் என்றார். அஞ்ஞான அந்தகாரத்தில் மூழ்கிப் பசுப்பிராயமாய் இருந்த அச்சமண்மூகர் குழுவிற்புகுந்து மன்னனுக்கு மெய்யறிவுச்சுடர் கொளுத்தும் திருப்பணிபூண்ட சம்பந்தப்பிள்ளையார் அப்பசுக்களை மடக்கும் புலியே ஆயினார். வனத்துப் புலிகள்போன்ற தாமசகுணப்புலி இல்லை. ஞானமயமான சத்துவசம்பத்துள்ள புலி என்று விளக்கவே ஞானப்புலி என்று பாடினார், "பரசமயகோளரியைப் பாலறுவாயனை" என்று பிறர் பாடியதும் இங்கு நினைக்கத்தக்கது. இப்பருவத்தின் இரண்டாம் செய்யுளில் 'கற்றூண் மிதவைக்கே விடும் புற்பாய் உடையார் திண்டாடவும் தாம் கரையேறிய திருநாவுக்கரையன் சித்தத்தின் துணையே' என்று தொடர் மொழியால் அப்பருக்கும் பிள்ளையார்க்கும் இருந்த உறவுமுறை விளக்கப்படுகிறது. இப்பருவத்து மூன்றாம்செய்யுளில் அங்கம்

பூம்பாவை ஆகிய அற்புத வரலாறு அருமையாக அமைக்கப்பட்டுள்ளது. திருவுக்குப்படி யொக்கத்திகழ் சித்ரப்பிடி என்றது பூம்பாவையைக் குறிக்கும் தொடராம். பொற்குடம் விட்டுத்திரியத் தருவிக்கத் தமிழ்பெற்றாய்! என்பது அங்கு நிகழ்ந்த அற்புதத்தை விளக்குவதாம். நான்காம்செய்யுளில் சம்பந்தப்பெருமான்பிறப்பெடுத்து முலையுண்டதால் உலகுபெற்ற நலங்கள் எல்லாம்அடுக்கி உரைக்கப்படுகின்றன. "புவியோர் அறிவை வாராமே போகவிட்டு வஞ்சப் புன்சமயத்தே மதிகெட்டுத் திரியப்பாராமே, திகிரிக்கோன் மாயப் பணிசெய்யப் பழகாமே, பழுதாகா மறை நூல் சோராமே, அடிசூடும் தொண்டர்க்கு ஓர் துயரம் சூழாமே, தமிழ்மாறன் துயர்ப்பட்டுச் சமணேச்சாராமே முலையுண்டாய்'; என்று கூறுகின்றார். இங்கு முலையுண்டதாக உரைத்தது ஞான போனகம் உட்கொண்ட குறிப்பே ஆகும். அவர் ஞானப்பால் உண்டதால் உலகம்பெற்ற நலங்கள்இவை என உரைக்கத் துணிந்தவர் இன்னின்ன தீங்குகள் விளையாவண்ணம் பால் உண்டவர் என்று அழகுற அமைக்கின்றார். திகிரிக்கோன் மாயப்பணி என்றது திருமாலைத் தெய்வமென்றுகொண்டு பழகுதலைக்குறிக்க வந்ததுபோலும் புத்தாவதாரத்தைக் குறித்ததும் ஆகலாம், செங்கீரைப்பருவத்தே சம்பந்தப் பிள்ளையாரைச் சிவத்தின் செல்வர் என்று துணிந்து உரைத்ததை இங்கும் உறுதிசெய்யக் கருதினார்போல 'ஆலாலம்தனை அன்று உண்டானேப் பிரியா வாழ் நடையாள் மாமகனே' என்று தாய்க்கும் மகனுக்கும் உள்ள உறவையும் விளக்கியிட்டார். திருமருகலில் விடம் தீர்த்த திருப்பதிகச்சிறப்பை விளக்கக்கருதி அப்பதிகத்தில் முதற்றிருப்பாட்டில் வந்த சொல்லையே ஆண்டு கருத்தை வியப்புற உரைக்கின்றார். 'விடையாய் எனுமால்' என்ற தொடர் இங்கு விடைபெற எடுத்த கொடி

மருகல் உழை உத்தமரை விரகொடு திருப்பதிகம் நேர் கூறு. என வந்தது. விடமது கடித்த வழி இழியப்புரிந்த திருவருள் நன்கு விளக்கப்பட்டது. இப்பருவத்தில் ஒன்பதாம் செய்யுள் பிள்ளையாரைப் பல படப்புனைவதில் ஒப்புயர்வற்று விளங்குகின்றது. "மதுர கவிதைக் கடலில் வருபெரு மரக்கலம் நல்வழிவிடும் வனப்புடைய மீகாமா, மறிகடல் அடைத்தவனும் மறையனும் மதிப்பரிய மணியினை மதித்தருள் வியாபாரா அதிர்கலி புறச் சமயமுதுகளை அறுத்து உரிய அறுசமய வித்து விளை வேளாளா, மதுரையில் அழுக்குடைய அமண் மிருகம் அறுத்துவரும் காளா, கழுமலநகர்க்கதிப என்று அமைக்கிறார். இங்கு இப்பிரபந்த நாயகர் கவிக்கடலில் ஓடும் மரக்கலத்தை நன்கு நடத்தும் மீகாமன் என்றது இறைவன் அருளிய கவிச்செல்வத்தை அறிவிலா மக்கள் உலக வாழ்விற் சில்வாழ் நாட்பல பிணிச் சிற்றறிவுள்ள மக்களையே புகழ்வதிற் பயன்படுத்தி வாளை வீணாக்கும் குறையை மனத்தே பொறாது இறைவனுக்கு அமைக்கும் திருப்பதிகத் தொகையான மரக்கலத்தை மீகாமனாக நின்று கவிக்கடலில் நடத்திக்காட்டி உலக மக்களுக்கு உணர்வு கொளுத்தும் அழகை விளக்குவதாம். கடல் அடைந்தவன் திருமால், மறையவன் நான்முகன், இவ்விருவரும் தேடியும் பெறுதமணி சிவபரம்பொருள். அப்பொருளை உலகறியச் சுட்டிக்காட்டிய அருட்பிள்ளையாதலால் மணியை மதிக்கும் வியாபாரி என உருவகிக்கப்பட்டார். புறச்சமயங்களை களைந்து அகச்சமயங்களைப் பேணுதலால் வேளாளன் எனவும் பட்டார். அமணரை அழித்ததால் மிருக வேடருமாக உரைக்கப்பட்டார். புகலிப்பிள்ளைக்கு இவ்வுருவம் எல்லாம் பொருந்துமாறு உணர்ந்து இன்புறத்தக்கதே. பத்தாம் செய்யுளில் எரியினிடை இட்டஉரை தோலாமே நதியிடை இடு தமிழ்ப்பனுவல் போகாமே வழுதி உடல்

உட்கும் வகை திரிய விடுவெப்பில் அவன் வேவாமே, திருவருள்படைத்த முனி என்று குழவியைத் தாலாட்டு கின்றூர். முனி என்பது குழவியைக்குறிக்கவந்த சொல்லாம்.

சப்பாணிப் பருவத்தில் முதற் செய்யுளில் "பொய்கை சூழ் புகலி நகரிற் புனிதவாள் நகையுதவு குமுதவாய் அமுத இதழ் பொழியும் ஞானத்தமிழிஞல் வரைதழுவு பூமகளை வாழ்வித்து உரிய மறையை வாழ்வித்து என்னை வாழ்வித்த மாநாயகன்'' என்ற தொடர் ஆசிரியர்க்குப் பிள்ளையார் திருவடியில் உள்ள ஈடுபாட்டை நன்கு விளக்குகிறது. 'தலவலயம்முழுதும் அரவொலி வளர அமுதமுனி' என்ற விளியும் சிவமுழக்கச் சிறப்பை விளக்க அமைந்தவண்ணம் நோக்கி இன்புறத்தக்கதாம். ஐந்தாம் செய்யுளில் வருகின்ற கலைமகளும் மலர்மகளும் மண்மகளும் அடிபரவு கனகமலையரயன் மகளைக் கமலமகளுடன் மால்புகுந்து ஏவல் பல செய்யக் கைப்பிடித் தருளும் உரிமைத் தலைமகனை ஒரு திருத்தந்தையென உடையமுனி "என்ற தொடர் சிவசக்தி பாரம்யத்தை நன்கு விளக்கி அவ்விருவர்க்கும் இப்பிள்ளை மைந்தரான முறையை விளக்க அமைந்ததாம். ஏழாம் செய்யுளில்" பிறவிக்கடல் விழுந்து அலறுவார் பற்றவரும் நற்றூணியே, கலி அமிழக் கருணைப்புனல் பரப்பிய கார் காலமே, அடிபணிவார் மிடி ஒழிய அருள் அளப்பதாம் கொட்டாரமே, அறம் விரும்பிய மயில் அரனுடன்பட இனிதுபெற்ற கைக்காணியே, சமண இவுளி பிணம்பட உதறி நிற்பதாம் ஒரு புது ஆனையே இயல் இசைப்பயிர் விளைய வித்துவரு பொற்பூமியே என்று அமைத்த விளிகள் உள்ளும்தோறும் உள்ளம் உருக்கத்தக்கனவாம். ஒன்பதாம் செய்யுளில் "குமுத இதழ் திறந்து அழுது அழுது துய்த்தது முலைப்பாலை எனவும்,'' அமரரும் முனி

வரும் தொழப்பெற்றது திருத்தாளம்'' எனவும், ''தழலி னிடைதளிர் நிறம்பெற எழுதிவிட்டது தமிழ்க்கோவை'' எனவும் ''என்புகள் பொதிவது ஒரு குடம் கொடுவர அழைத்தது மலர்ப்பாவை'' எனவும்'' மிழலையம்பதிஅரன் அளித்தது படிக்காசு'' எனவும், ''மருகல் மருவு செஞ் சடையரொடு கற்றது விடத்தீர்வை'' எனவும் உள்ளம் உருகி உருகி உவப்போடு பாடுகின்றார். இப்பருவத்துப் பத்தாம் செய்யுளில் அடைமொழி ஒன்றும் இன்றி எவ் வகை இடர்ப்பாடும் இன்றி நாற்பது தலங்களுக்கு மேலாக வைத்திருக்கும் அமைப்பு நினைக்கத்தக்கது.

முத்தப் பருவத்திலே பகழிக்கூத்தர் பலவகைப் பட்ட முத்துக்களை அடுக்கிக்கூறியிருப்பது உண்மையே. அத்தகைய அடுக்கமைந்த செய்யுள் இப்பிள்ளைத்தமிழில் ஒன்றேனும் இல்லை என்பதும் உண்மையே. ஆயினும் முத்தின் பந்தர் உடையபிரான் முத்தம் தருக முத்தமே என்று அமைந்த மகுடம் ஒன்றே அம்முத்துக்களை எல் லாம் வெல்ல வல்லதாம். இப்பருவத்தே அம்முத்தங்கள் வராமல் மறையவும் இல்லை. நான்காம் செய்யுளில் வரு கின்ற பின்னிரண்டு அடிகள் இக்கருத்துக்கேஉதவுமாறு அமைந்துள்ளன. அங்கு வரும் ''மத்தக்களிற்றுப்பணை முத்தும் வளைவாய் முத்தும் கழை முத்தும் மன்னும். செங்நெற்றுண்முத்தும் கன்னல் முத்தும் நிகரொவ்வா முத்துப்பவளக் கனிவாயான் முத்தம் தருக'' என்ற பகுதி இங்கு நினைக்கத்தக்கது. முத்துப்பவளக்கனிவாய் என்றது பல்லும் இதழும் கொண்ட திருவாய்உருவை உவமித்ததாம். இனி இப்பருவத்தில் உள்ள மற்றச் செய்யுட்களின் சிறப்பைச் சற்றே கருதிப்பார்ப்போம். முதற் செய்யுளில் ''பரவை கடைந்த நாள் நெடுவான வரும் மலை உண்டு கடல் உண்டு மண் உண்டவனும் மண்ணுண்டு போகாமே விடமுண்ட மணவாளன் மனை

யாட்டி முலையுண்டு அமுதகனிவாயான் முத்தம் தருக'' என்று முத்தம் வேண்டும் அழகினை நாத்திகரும் கேட்டு இன்புறாதிருக்க இயலாது. மூன்றும் செய்யுளில் உள்ள விளியடுக்குக்கள் குமரகுருபரரை நினைப்பிப்பன. காலத்தோடு கற்பனை கடந்த என்று தொடங்கும் அவர் வாக்கை இச்செய்யுளோடு ஒப்பிட்டு இரண்டும் எடை ஒத்தல்கண்டு நடுநிலை அறியும் புலவர்கள் இன்புறுவர். இறைவன் சடாமகுடத்தின் சிறப்பை இச் செய்யுளில் இவ்வாசிரியர் அமைத்த அமைப்பு இவர்க்கு ஒரு தனிச் சிறப்பைத்தருவதாம். எருக்கே, புனலே கடிக் கொன்றை இணரே, அரவே, இளம் பிறையே இவையே முடிக்கும் சடாமகுடம் என்று சடையில் இடம் பெற்ற எல்லாப் பொருளையும் வருவித்து எளிய முறையில் எண்ணேகாரம் கொடுத்து உரைத்துளார். இதற்கு மேல்வரும் செய்யுட் பகுதியின் இன்பச் செவ்வியைத் தமிழ்ச்சுவை அறியாரும் அறிய வேண்டும். ''சடாமகுடப் பெருமான் உலகுக்கு இனிது அளித்ததருக்கே, தெய்வத்தமிழ்க்கொழுந்தே, தனிநான் மறையின் கிழங்கே, புன்சமணப் பரிமேய்கரைஉழக்கும் தனிவாரணமே, திருஞானப்பெருக்கே, அடியார் பெற்றபெரும் பேறே, நாறும் குமுதமே, பேணும் தொண்டைச் செங்கனியே, பீடார் சோதிப்பவளமே, 'இன்னவண்ணம் அமைந்த அடுக்குவிளிகள் எல்லாம் பிள்ளைப்பெருமானை விளக்குகின்றன. முருக்கே அனைய கனிவாயால் முத்தம்தருக என்று இறுதியில் வேண்டுவதும் வெளிப்பட வருகின்றது. நான்காம் செய்யுளின் முற்பகுதியிலே திருக்கண்ணப்ப தேவர் சிவபூசைச் சிறப்பு அழகுற அமைக்கப்பட்டுளது. அச்சிவபூசனைக்கு அவ்வன்பரது குஞ்சியே கொத்துப்படு நாண்மலர்க்கூடையாக உதவியது. அவர் மெல்லும் இறைச்சியே இறைவன் ஏற்றருளும் திருவமுதாக உதவியது. இத்தகைய சிவபூசையை சுட்டிச் 'சித்தத்தெழுந்தபேரன்பாற்

சிலைக்கைவேடர் செய்த பூசையை ஏற்றருளிய காளத்தி இறைவர்பாற் செம்பொற் சின்னம் பேற்றேனே' என்று பிள்ளையாரை விளக்குகின்றார். ஐந்தாம் செய்யுளில் "மங்கையர்க்கரசியுடனே குலச்சிறையார் நெடுநாள் எண்ணும் எண்ணமெல்லாம் முடிக்கும் பெருமான் சம்பந்தப் பெருமான்" என்றமைந்த தொடர் சம்பந்தரது மதுரை யற்புதத்தை ஒருவாறு விளக்குவது, எட்டாம் செய்யுளில் "பவளத்திருவுருக்கொண்டவனும் பச்சைத் திருவுருக்கொண்டு அவன் இடப்பக்கம் உறைபவளும் அவலும் அப்பமும் திருவயிற்றில் அடைக்கும் களிறும் அமரர் சிறைவிடுக்க அசுரரைக் கொன்றவனும், சடையருக்கு அன்புடை மெய்த்தொண்டரும், சுருதி முற்றிய திருஇசைப்பண் இருசெவிக்கொண்டு உருகப் புத்தன் தலை உருட்டும் தலைவன் என்று சம்பந்தப் பெருமானை விசேடிக்கிறார். சம்பந்தப் பெருமான் தேவார இசை கேட்கும் விருப்பம் சிவபெருமானுக்கேயன்றி இறைவிக்கும் இருமக்களுக்கும் தொண்டர்க்கும் உண்டு என்று தெளிவாக உரைக்கின்றார். இப்பருவத்தின் ஒன்பதாம் செய்யுளில் சமண் இருட்டின் திரள் குலைக்கும் பருதி, பவுத்தன் தலைதுணிக்கும் கருவி, மனதிடைப் பைங்கமல வட்டம் தனில் இருக்கும் பிரசம், என்று சம்பந்தப் பெருமானை வருணித்தது நினைத்து இன்புறத்தக்கது. வாரானைப்பருவத்தின் முதலாறு செய்யுட்களில் அமைந்த மகுடம் "வடநூற்பெருமான் தமிழ்ப் பெருமான் மறையின் பெருமான் வருகவே" என்பதாம். ஒவ்வொரு விளியும் பிள்ளையார்க்கு எத்துணைப் பொருத்தம்உற அமைந்துள்ளன என்பது மெய்யன்பர்க்கு விளங்காதிராது. இரண்டாம் செய்யுளில் சீகாழி வள நகரம் மகராலயம் போல் விளங்கும் என்று சிலேடைகள் சில அமைக்கின்றார். பொற்சிலையாளி இருக்கும் தெய்வத் தோணியால், ஒலிக்கும் சங்கின் சேனையால், பூமாரன்

துவசத்து எடுத்த சுறவத்தால் மணியும் நித்திலமும் வெயிலும் நிலவும் பொழிதலால் துகிரார் கனிவாய் அமுதும் வேல் விழி நஞ்சும் மதிவதன நல்லாருடனே தோன்றுதலால், சீகாழி நகரம் மகராலயம் போல் தோன்றும் என்று செம்மொழிகளாற் சிலேடை அமைத்திருப்பது நினைத்து இன்புறத்தக்கது. மூன்றும் செய்யுளில் பச்சைப்பிடியைக் கலியாணம் பண்ணும் பெருமான் திருச்செவிக்குப் பாடும் பெருமான் என்று பிள்ளையார் புகழப்படுகின்றார். ஐந்தாம் செய்யுளில் மதுரைப்பதியிற் பச்சை மாலை பெற்றதும், அரத்துறையில் முத்துக் குடை பெற்றதும், ஆவடுதுறையில் முடியாத பொற்கிழி பெற்றதும் உரைத்ததேயன்றி அரம்பை அனையார் கைக் கமலத்து அஞ்சொற்கிளிகள் திருப்பதிகம் வடிக்கும் கனகமறுகு சூழ் புகலி, என்று சீகாழித்திருப்பதியை புகழ்ந்த சிறப்பும் நன்கு நினைத்து இன்புறத் தக்கன. ஆறும் செய்யுள் புகலியில் நிகழும் வேளாண்மைச் சிறப்பை அதன் பகுதிகளான பல தொழில்களையும் நன்கு விளக்கி அமைத்துக் காட்டுகிறது. ஆற்றொழுக்காக அடை மொழிகள் இன்றி அமைந்திருக்கும் அச்செய்யுள் வேளாண்மையில் இவ்வாசிரியர்க்கு இருந்தபழக்கத்தை நன்கு விளக்குவது. ஏரெழுபது பாடிய கம்பன் இச் செய்யுளைக் கேட்டால் மனம் மகிழவே செய்வான். பின்னுள்ள ஐந்து செய்யுட்களுக்கு மகுடமாக அமைந்த தொடரும் மிக்க சுவையுள்ளது. 'மலையின் மகள் அமுத கலசமுலையருவி பருகு தமிழ் விரகன் வருகவே, என்ற அமைப்பு இச் செய்தியில் இவர்க்கு உள்ள அன்பு ஊற்றத்தை நன்கு விளக்குவதாம்.

அம்புலிப்பருவம் பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தத்திலே புலவரது புலமையை அளக்க உதவுவது என்பது காலங் கண்ட கருத்தாம். அம்புலியை நான்கு வித உபாயங்

களால் அழைத்தல் வேண்டும் என்பதும் அவ்வுபாயங்களுள் சாம தான பேதங்களுக்கு மும்மூன்று செய்யுளை வைத்து இறுதி ஒரு செய்யுளைத் தண்டோபாயத்துக்குப் பயன் படுத்த வேண்டும் என்பதும் பிள்ளைத்தமிழ் மரபு அறிந்தார் கருத்தாம். இப்பிள்ளைத்தமிழில் இம்மரபு சிறிது மாறுபட அமைந்துள்ளது. முதற் செய்யுள் சாம உபாயத்தோடு தொடங்கவில்லை. "பவுத்தனைப் பார்த்த கோபம் இன்று உன்னையும் பார்க்கில் ஒரு பார்வையிற் பணியுண்டோ" என்ற தொடர் தண்ட உபாயத்தையே குறிப்பிக்கிறது. கூன் பாண்டியனைக் காதிய வெப்பு முதற்கண் எடுத்து ஆளப்பட்டது. கரிய பீலியும் அருகர் தலைகளும் பாய்களும் சுறு நாறக் காதும் வெப்பு என்று அது விளக்கப்பட்டது. அவ்வெப்பினுற்பட்ட கண் கலக்கம் கண்டு அருட்கண்சாத்தி நின்குலத்து அரசன் மேல் மன்னுகூன் உடன்தீர்த்து வாழ்வு தந்தவன் என்பதும் உணர்ந்திலை என்ற பகுதி மதியை இழித்துரைக்க அமைந்தது. மதியிலாய் என்பது இழிவுரையே. அரிய நாயகனுடன் இனிதாடுதற்கு அம்புலி வருவாயே என்று அழைக்குமுன் நாயகனுக்கு உள்ள ஏற்றமும் மதிக்கு உள்ள இறக்கமும் குறிப்பித்ததும் நினைக்கத்தக்கது. இறுதிப்பாட்டில் வருதற்குரிய சினக்குறிப்பும் ஆற்றற்சிறப்பும் முதற்பாட்டிலேயே வந்தது எங்ஙனம் பொருந்து மென்பார்க்கு ஒருவாறு விடை கூறலாம். சாமதான பேதங்களால் மும்மூன்று செய்யுள் பாடியும் விளையாட வாராத அம்புலியைத் தண்ட உபாயம் காட்டி இறுதியில் வரவழைக்கும் முறையில் பிரபந்த கர்த்தாக்கள் முன்னுளில் அமைத்தாராயினும் இத் தெய்வக்குழவியோடு அம்புலி விளையாட வரவேண்டும் என்று துணிந்த ஆசிரியர் முதற் செய்யுளிலேயே அச்சம் காட்டி அவனை அழைத்து விளையாடச்செய்ய முயல்வது போலத் தோன்றுகிறது. மற்றச் செய்யுட்களில் தண்ட

உபாயம் இன்மை தெளிவாம். இரண்டாம் செய்யுள் "மருகல் மாநகர் தன்னில் வணிகேசன் தேவி புண்படு நெஞ்சுடன் படுதுயர் திருமலர்க்கண்சாத்தித் திரிய ஆருயிர் கொடுத்தவன் "என்ற சிறப்புப் பிரபந்த நாயகர்க்கு உரைக்கப்பட்டது. சந்திரனுக்கு ஒரு குறைதீர வேண்டிய அவசியம் உண்மை மேலே உரைக்கப்படுகிறது, குறை தீர்க்க வல்ல தலைவன் அழைக்கின்றான். தீர வேண்டிய மதியே வருக என்று அழைப்பதாக உள்ள இச் செய்யுள் தான உபாயம் தழுவியதாம். "நின் மொழிக் கோளினால் தமது ஆகம் குறைந்த நாகங்கள் இரண்டும் வந்து உன் உடல்கூட (மென்று) உமிழ்ந்தாலும் ஆவி உள்ளதாம் ஆகமும் உள்ளதாம்" என்று கூறுதலால் அம்புலி பெறும் நலத்தை விளக்குகிறார். மூன்றும் செய்யுளும் தான உபாயமே காட்டுகிறது. 'கோல் பிடித்து ஊன்றுவார் இன்றியே ஓடத்தை வருக, என்றான். உயர்ந்த ஆண்பனை பெண்பனை ஆகவும் ஒரு விசை கண் பார்த்தான். வைகையின் எதிர் செலத்தன் திருவேடு இட்டான். தாமரைக் கண்களால் நின் கறை மேனியைப் பார்த்தால் நின்மேல் வரும் பழி நீங்க, நீ துய்யையாய் விளங்கலாம். (உன்னை அவன்) விண்ணோருக்கு அரசன் ஆக என விடுக்கினும் விடுக்கும், ஆதலால் அம்புலி வருவாயே என்கிறார். இச் செய்யுளில் 'செய்ய பாலகன் செய்யு மிச்சேதிகள் யாவர்க்கும் தெரியாது' என்ற அடி பிரபந்த நாயகர் சிறப்பை மதி அறிய விளக்க அமைந்ததாம். விசை சேதி என்ற இருமொழிகள் உலக வழக்கில் உள்ளன. அவை இங்கு ஆளப்பட்டன.

நான்காம் செய்யுளும் தான உபாயம் தழுவுவதே. 'மயிலையம்பதியினில் சண்பகப் புதுக் கொம்பில் சாரும் வல்விடம் தீண்டலும் உயிர் விடும் தத்தை' என்றது

பூம்பாவை யாம். தத்தை தன் திருவென்பு குழைத்த சந்து அகில் வளவிய குங்குமக் கொங்கைகளுடன் செம் பொற் குடத்தில் வந்து எழச் செந்தமிழ்த் திருவிசை கோத்தவன் இவன் என்ற சிறப்பு இங்கு மிகவும் பொருத்தமாக ஆளப்பட்டுளது. மேலே சந்திரனுக்குப் பாம்பினால் விளையலாகும் கேடு விளக்கப் படுதலால் இதன் தகுதி தெளிவாம். "வன்பணப் பாம்பின் வாய்ப் பட்டு நீ யாருயிர் இழந்தாலும் இனிய செஞ் சொல்லால் உன்னையும் இங்ஙனே யாவரும் எதிர்கொள்ள அழைக்க வல்லவன்" என்ற தொடர் அம்புலி பெறும் பேற்றை நன்கு விளக்கி நிற்கிறது. என்பைப்பெண்ணாக்கிக்குடத் தில் அழைத்தாற்போல நீ இராகு கடித்து இறந்தாலும் உன்னையும் உயிரோடு எழுப்பி வாழ வைக்க வல்லவன் என்ற பெருமையை விளக்குகின்றது.

ஐந்தாம் செய்யுள் பேத உபாயம் தழுவுவது ஆகும். "தேவர்கள் மணவாளன் செம்பொன் மேனியைப் பகிர்ந்து கொண்டிருந்தவள் திருமுலை பெருகும் பால் ஞானம் உண்டு அறுபத்துநாலு கலை நிரம்பிய முனி இவன்". ஆன நின்கலை குறைவற நிரம்பலாம் என்ற பகுதி இக்குறிப்பை வெளியிடுகிறது.

ஆறும் செய்யுளில் வரும் உபாயம் பேதம் போல் வது. உலகெலாம் தனித்தனி மயங்கவும் மயங்காது தோணியாய் மிதந்த ஊர் சிவன்பதி. மாலும் நான்முக னும் இந்திராதியரும் சுரரும் முனிவரும் எங்குளார் என்ன அப்பிரளயம் இன்னமும் வரலாம். அந்த நாளி லும் தோணியைப் பற்றலாம். உன் இழி நிலை அது. இவன் உயர் நிலை இது. வருக என்று அழைப்பது காண்கிறோம். ஏழாம் செய்யுள் சாம உபாயம் எனத் தக்கது. பிரமர் பதம் அருளவோ, அரி பெரும்பதம்

அருளவோ, பகலவன்பதம் அருளவோ, விதிஅடங்கலும் அழிய அடிமை கொண்டவன் வளமைதங்கிய புகலி யான் வருக என்றனன் என்று இப்பாட்டை முடிக்க வேண்டும். எட்டாம் செய்யுள் சாம உபாயம் உள்ளது எனவே கருதத்தக்கது. "சதஇதழ்விரிஞ்சனை வருக என்றிலன், கஞ்சனை வினை செய் வஞ்சனை வருக என்றி லன் கடாம் உடைய களிறு உடையவன் (இந்திரன்) தனை வருக என்றிலன். இருள் எலாம் உதிர வந்து எழு கதிரவன் தனை வருக என்றிலன், சண்பையர் அதிபன் வெங்குரு உடைய கோன் வருக அம்புலி வருக என்ற னன் என்று இப்பாட்டின் பொருளை முடிக்க வேண் டும். அம்புலிப்பருவச் செய்யுள் அமையும் முறையில் இது மிகவும் புதுமை பொருந்தியது. பிற பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தங்களில் இங்ஙனம் பிற தேவரை அழைக்காமல் உன்னை அழைக்கின்றான் என்ற கருத்து இருப்பதாக உரைப்பது அருமையே ஆம்,

ஒன்பதாம் செய்யுள் சாமமும் தானமும் கலந்த தாம். இச்செய்யுளில் பிரபந்தநாயகருடன் விளையாட வருதலால் அம்புலிபெறும் நலங்கள் அடுக்கப்படுகின் றன. "தொண்டர் பெருமைகண்டு உமது அடிமை என்று அடிபணியலாம் அரியவன் திருஇசை முகந்து இருசெவி நிறைந்து அறிவு அறியலாம். இளையமங்கையர் வதனசந்திரர் உறவு எனும்படி திரியலாம். இரவு எழுந் தது பகல் ஒதுங்கியது என வரும் குறை தவிரலாம். ஒளி மழுங்கிட முனி இடும்பழி இலது எனும்படி புகுதலாம். உலகில் உன் குல அரசு எனும்படி உடல் வளர்ந்தது நிமிரலாம். புகலியான் வருக என்றனன் அம்புலி வருக" என்று எளிய நிலையில் உள்ள உனக்கு இத்தனை நலங்கள் உண்டாகுமே இங்கு விரைந்து வருக என அழைப்பது மிகவும் சுவைபட உள்ளது. இரவு

வந்ததும் தேய்ந்து வளர்ந்து கடமை பூணவேண்டுமே என்ற குறையும் தீரும். முனிவொடு சுக்கிரன் இட்ட சாபமும் தீரும் என்று இனிய மொழிகளால் அவன் குறை தீர்வதை உரைத்து அழைக்கிறார். புகலியின் வளம் சொல்லும்போது வளை சொரிந்த தரளம் எங்கும் இருப்பதால் எப்பொழுதும் நிலவொளி அங்கு உண்டு என்று விளக்குகிறார்.

பத்தாம் செய்யுளும் ஒன்பதாம் செய்யுள்போலவே அமைந்துளது. அங்கு " அரி அயனோடு இந்திரர் கணம் அடங்கலும் கடல் கடைந்து அமுது உண விரும்பிய கலதியில் ஓர் பகையினால் எயிறுகொண்டு உனது உடல் விழுங்குவன் என வரும்படி வாவும் நீடிய பெரும்பணி உடன் வரும்படி பரிபவம் செயல் அருமையோ " என்ற தொடரால் அம்புலிக்கு விளைய இருந்த குறை விளக்கப் பட்டது. உலகுடைய தாய் வயிறு வந்து எனை அடிமை கொண்டவன் என்ற தொடரால் பிரபந்தநாயகன் பெருமை விளக்கப்பட்டது. இங்ஙனமாக அம்புலிப் பருவச்செய்யுள் பத்தும் முன்னோர் வகுத்தமுறைக்குச் சிறிது மாறியே செல்லினும் பிரபந்தநாயகன் பெருமை யை விளக்கி அம்புலியின் சிறுமையை நன்கு விளக்கு வதில் மிகவும் சுவையான நெறிபற்றி நடக்கக் காண் கிறோம்.

சிற்றிற்பருவச் செய்யுட்கள் சுருங்கிய அளவில் அமைந்திருப்பது இப்பிரபந்தத்துக்கு ஒரு தனிச்சிறப் பாம். இப்பருவத்து முதற் செய்யுளில் சிறுமியர் தாம் சிற்றில் அமைக்கும் முறையை உரைத்து அதனை அழிக்க வேண்டா எனப் பிரபந்தநாயகனை வேண்டுவது மரபாம் என்பர். இங்கு "காழிக்கு அரசே முலை சுரந்தமொழியால் முடியாப்பழம் பொருளை முன்னே காட்டி உலகம்

முத்தைக்கூட்டிச் சிற்றில் இழைத்திருக்கும் நிலை ஒரு வாறு விளக்கப்பட்டது. உனது அடிமலர் கன்றும்படி இம்முத்துக்கள் அங்கே உறைக்கும். ஆகவே எம் அரசே சிற்றில் அழியேல் என்று வேண்டுகின்றார்.

நான்காம் செய்யுளில் "சோதித்து அயன்மால் தேடரிய தோன்றுப் பொருளைத் தோன்றுவித்த ஆதித்தி யனே" என்ற விளி நாத்திகர் உள்ளத்துக்கும் ஒளிதர வல்லதாம். அயனும் மாலும் பல யுகங்கள் சோதித்துப் பார்த்தும் அடிமுடி காணற்கு அரியனாய் இருந்த அண் ணலை வேதத்திலும் வெளிப்படத் தோன்றுப்பொருளை, இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன், இவன் இறைவன் என்று இயம்ப ஒண்ணாத இறைவனை உலகம் எல்லாம் உணர்ந்து உய்யும்படி "தோடுஉடையசெவி யன் விடையேறிஓர் தூவெண்மதிசூடி" என்று சுட்டிக் காட்டிய தெய்வக்குழவி ஆதலால் வெளியிருளைப் போக்கி உலகப்பொருளைக் காட்டி உதவும் பணி பூண் டிருக்கும் ஆதித்தியன்போலவே அகவிருளை அறவே ஒழித்து அங்கு உறையும் அவனை விளக்கிய காரணத்தால் ஆதித்தியனே என அழைக்கப்பட்டார். இங்கு உவமை யினும் பொருளே சிறந்தது என்பதை ஆசிரியர் உணர்ந் தும் வேறு உவமை அகப்படாமையால் இந்த ஆதித்திய னைப் பயன்படுத்தியுள்ளார். உவமை உணர்ந்தன்றி உருவ கச்சுவை உணர இயலாமையால் இங்கு உவமையளவே உய்த்துணரத்தகும்.

ஐந்தாம் செய்யுளில் வழுதியின் வெப்புநோயும் கூனும்மாற்றிய திருவருளை முதற்கண் அமைத்தார். பிறகு மண்மேற் பழுதிலாத திருநீறும் பஞ்சாக்கரமும் நிலைநிறுத்திய சிறப்பை உரைத்தார். இறுதியாக எழு தொணாத நான்மறைக்கும் அடியேங்களுக்கும் பிறர்

பொங்கியெழும் என்பதை நடுநிலையாளர் ஆராய்ந்து தேறுக. மேலும் மலர் உலகுக்கு மணவலி; முறுகு கலிக்கு முதுபகை, முதன்மை மறைக்கு ஓர் தனிமுதல், துறும் அமணர்க்கு ஓர் வயிறெரி, சுருதி இசைக்கு ஓர் புகலிடம் என்று ஒவ்வொரு தொடரும் அமுதம் ஒழுக அமைக்கின்றார். இறுதியாக அறுமுகவற்கு ஓர் உறுதுணை என்று அமைப்பது அறுமுகப்பெருமான் வேறு இவர் வேறு என்று உலக விழியால் நோக்குவார்க்கு உவப்புத் தரத்தக்கதாகத் தோன்றினும் சிவமயமே ஆகி, ஆறுமுகத்துக்கு உறுதுணையானார் என்று கொள்வதே சிறப்பாம். இப்பருவத்து இறுதிச் செய்யுள் 'இணையடி புழுதி படைத்து' என்ற தொடர் சிற்றில் சிதைப்பதால் விளையும் குறையை விளக்க அமைவதாம். இச்செய்யுள் தன் பொருளை எளிதில் வெளியிடாதிருப்பது புலவர் குழுவின் ஆராய்ச்சிக்குரியது.

சிறுபறைப்பருவத்து முதற் செய்யுளில் விளிகள் மிகவும் அழகுற அமைகின்றன. கருதரியமுத்தி தருகாரே, கலைகள் நிறைவித்த மறைவேரே, பொருகலி துணித்த புகர்வாளே, புவனமகள் பெற்ற பெரும்பேறே அரிய இசை கட்டும் அடுபாகே அதிமதுரமிக்கதெளி தேனே, திருமுலைசுரக்கவருபாலே என்று உள்ளன. இறைவி அருளிய பாலே சம்பந்தப்பிள்ளை ஆயிற்று என்ற கருத்தானே திருமுலை சுரக்க வருபாலே என்ற விளி அமைந்தது. இரண்டாம் செய்யுளில் சீகாழி வளநாடு இரண்டடிகளால் வருணிக்கப்பட்டது. பின் இரண்டடிகளில் "குளிர் புனலகத்தில் வாழும் குமுத மலர் ஒத்த இதழாலே தெளி தமிழ் உரைத்த பெருமாளே" என்ற விளி அமைகிறது. மூன்றுஞ் செய்யுளில் 'அழல்வலி தவிர்த்த தமிழ்விரா பரனை அறிவித்த விரலாளா திருவிசை அளித்த கனிவாயா' என்ற விளிகள்

மிகவும் சுவை உள்ளன. நான்காம் செய்யுள் சம்பந்தர் முழக்கும் சிறுபறையால் உலகம்பெற இருக்கும் நலங்களை அடுக்கத் தொடங்குகிறது. அமணர் பொய்ச் சொல் பெருகாது, கலிதவத்தை நலியாது, மனுவழி பிழைபடாது, வழுதி உடல் வெப்பின் உருகாது, முனிவர் தவத்தை ஒழியார் முதல் மறை வழக்கும் அழியாது. இத்தனை நலங்களும் பிள்ளையார் சிறுபறை முழக்கால் விளைவனவாம் என்று உரைக்கின்றார். ஐந்தாம் செய்யுளில் அளக்கர் (கடல்) உலரா வண்ணம் உயர் கதலி விட்டகனி ஆரும் நவரசம் அளிக்கும் வயலாலே நல மருவும் கொச்சைவயம் என்று சீகாழியைச் சிறப்பிக்கின்றார். கடல் அருகே இருப்பதால் இவ்வருணனை பொருத்தம் எனவே தோன்றும். சிவகதி அளித்த பெருமானே என விளித்து அடியவர் பிழைக்க அருளாய் என வேண்டுகிறார். ஆறும் செய்யுளில் அமுத திருநிலை அழக என்று விளிக்கத்துணிகின்றார். இவ்வழகையால் உலகம் பெற்ற பேறுகளை மேலே அடுக்குகின்றார். வழுதி தெரிதமிழும் இயல் இசை நாடகமும் வடமொழியும் மிக்க பொருள்சேர் செழு மறையும், அழகுபெற அமுத குழவி என்று அமைக்கிறார். ஏழாம் செய்யுளில் திரிபுரை அமலை விமலை என்று இறைவியைப் புகழ்ந்து அவள் அமுது அருத்திய புதல்வா என விளிக்கிறார். 'மங்கையர்க்கரசி வளவர்கோன்பாவை' என்று சம்பந்தரே அருளிச் செய்ததற்கு ஏற்பத் "தவள குலபதி மகள் தன் இதயம் மகிழ்வுற மதுரைதனில் அமண் அறுத்த சிறுவா 'என்று விளித்த அளவில் அமையாது 'சிவனை இவன் என விரலின் நுதி கொடு அருளிய முனிவ' என்றும் விளித்து உள்ளம் உருகுகின்றார். எட்டாம் செய்யுளிலே சம்பந்தர் தேவாரத்தை மலைமகள் தன்முலைகுலவு மொழி என்று சிறப்பிக்கிறார். அந்தச் சிவஞானம் பருகியதால் எழுந்த திருப்பாட்டு அதன் பரிணமமே ஆத

லால் இக்கருத்துப் பொருத்தமுடையதே. "மூறுகுதழல் இடைகுளிர மலைமகள் தன் முலைகுலவு மொழி எழுதி யிட்டு, நதிநேர் குறுகி எதிர்செல, அமணர் வயிறுள் எரி செல, இனிமை கொள இயல் உரைத்த முனிவர் என்ற விளி நெடுந்தொடரிலிருப்பினும் அமுதம்போன்ற சிறப் புள்ளது. அடுத்த செய்யுளில் அதிமதுர கவிதைதரு கவு ணியர் குலக்குரிசிலே திருநெறியும் அடியவரும் மறையும் உய்ய நீ அருள் கூர்ந்து சிறுபறை முழக்குக என வேண்டுகின்றார். இப்பருவத்திற் பத்தாம் பாட்டு இன்மை குறையாகவே தோன்றுகின்றது.

சிறுதேர்ப்பருவத்துச் செய்யுட்கள் எல்லாம் நீண்ட உருவத்தில் அமைந்துள்ளன. முதற் செய்யுளில் இயற் கை வருணனை அழகுற வருகின்றது. 'இக்கரை அக்க ரையிற் செல் என்று ஓடம் அழைத்த பசுந்தமிழாளி' என்ற இனியவிளியும் வருகின்றது. இரண்டாம் செய் யுள் சிவத்தை நன்கு நினைப்பிக்க அமைந்துளது. இரண் டாம் வேற்றுமையால் அமைந்த தொடர்கள் எல்லாம் சிவபிரான் திருவிளையாட்டு ஒவ்வொன்றையும் விளக்கு வனவாக உள்ளன. அத்தொடர் மொழிகளை முதல் வேற்றுமையில் நிறுத்திக்காண்போம். தக்கவரைப் பணிகொண்டவர், கழல்தந்தவர், கதிர்வாள் தானவ னுக்கு அருள் செய்தவர், புரம் ஆன தழற்புகவே நக்கவர் தனி நட்டுவர் கனகக்கிரி பெற்றவள்பால் நல்லவர், சிலை வில்லவர், கரு நாரணனுக்கு அரிதாயிக்கவர் கமலத்தவ ரைத் தலைக்கொண்டவர், வேலைவிடத்தினை உண்டவர் என்று உரைத்தற்குரிய இறைவனைப் பாலை நெய்தல் முதலிய பண்களாற் பாடிய பசுந்தமிழாளி சிறுதேர் உருட்டுக என வேண்டுகின்றார். இத்தொடர்மொழி களில் தானவனுக்கு வாள் அருளியது இராவணனுக்கு இறைவன் அருளியதாகலாம். தனி நட்டுவர் என்ற

தொடர் உலகம் ஒடுங்கிய சருவசங்கார காலத்தேபேரம் பலத்தே தனி நின்று அவன் திருநட்டம் ஆடும் சிறப்பை விளக்க அமைவது கமலத்தவரை என்று பன்மையாற் கூறியது "நூறுகோடி பிரமர்கள் நுங்கினர் என்ற கருத்தை நினைப்பிப்பதாம். மூன்றும் செய்யுளில்" மாறன் வெதுப்பொடு கூன்நிமிரச்செய்த மருந்து, செழுந்தமிழ்வல்லிதழைக்க இருத்தியதேர் வெண்மை படைத்த எலும்பு உடலாக நிறுத்திய வேதகன், வேதமுடித்த பழம்பொருள் உண்மை விளைத்து எழு வித்து அகலாவண்ணம் புதுக்கிய கற்பகம், அன்பர்கள் வைத்த சரக்கறை, சூழ்வல் அமணர்க்கு வழிப்பகை, ஈசன் மனத்து மகிழ்ச்சி, விடாது உண்மை விளைத்த சிவக்கவிகோபன் உருட்டுக சிறுதேர் எனவரக் காண்கி ரேம், மாறன் கூனும் வெப்பும் நிமிரச்செய்த மருந்து என்றே பிள்ளைப்பிரானை உரைத்தது மிகவும் பொருத்தம் ஆம். தமிழ்வல்லிதழைக்க இருத்தியதேர் என்பது ஒரு பழங்கதையை நினைப்பிக்கிறது. பாரிவள்ளல் காட்டிற் கொழுகொம்பு இன்றித்தவித்த முல்லைக்கொடிக்குத் தன் தேரையே நிறுத்தி வந்தான் என்பது சங்கச் செய் யுட்கள் தரும் வரலாறுகும். அதனைப்பயின்று அறிந்த இவ்வாசிரியர் இங்கு சம்பந்தப்பிள்ளையார் தமிழ்க்கொடி கொள்கொம்பு இன்றி வாடாது வதங்காது உறுதியுற உயிர்பெற்று வாழ நிறுத்திவைத்த தேர் என்று கூறியது சம்பந்தர் வாக்கில் ஊறிய உள்ளத்தார்க்கு மகிழ்ச்சியும் இன்பமும் பயவாதிராது. எலும்பு உடலாக நிறுத்திய வேதகம் என்பது பரிசவேதி போன்ற பொருள் என உரைத்தவாறு ஆம். வேது வேதகம் என்ற சொற்கள் இங்கு பொருந்தத் தக்கன. பிறகு எஞ்சியிருக்கும் சொல் அகன்ஆர் என்றே ஆர் என்றே கொள்ளத்தகும். அடுத்த கருத்து மிகவும் சுவை ததும்புவது, வேதம் முடித்துக்காட்டிய பழம் பொருளின் உண்மையைப்

பல்லாயிரம் பாட்டாக அருளிய சிவக்குழவி ஆதலால் வேதப்பொருள் உண்மை விளைத்தெழு வித்து எனப்பட்டார். வண்மைக் குணத்தையே புதுக்கிவிளக்க வந்த புதுக் கற்பகம் என்றார். அன்பர் தம் அன்பு அனைத்தும் வைக்கத்தக்க சரக்கறை. சரக்கறை என்னுந் தொடர் மொழி அப்பர் திரு விருத்தத்தில் இறைவனையே குறிக்க வந்திருப்பது இவ்வாசிரியர் அறியாததன்றே. அமணர்க்கு வழிப்பகை என்பது சென்ற சென்ற இடம் எல்லாம் அவ்வினமே வளராது அழித்த அருட்செயலை விளக்கிய தாம். ஈசன் மனத்து மகிழ்ச்சி என்பது திருமறைக் காட்டிலே அப்பர்க்கு விளக்கிக் காட்டிய குறிப்பும் பிறவும் ஆம். உண்மையே விளைத்த சிவநெறிக்குக் களியாக உள்ள எவற்றையும் சினத்து அழிப்பவன் என்பதே அடுத்த தொடர்க் கருத்தாம். இங்ஙனம் பல கருத்துக் களை அடக்கிய இப்பாட்டு ஒரு பெருஞ்சரக்கறையே ஆம்.

நான்காம் செய்யுளில் "ஆதியுகத்தில் அன்னமும் ஏனமும் அன்று தமக்கு அரிதாய். அங்ஙன் நினைப்புற இங்ஙன் எமக்கு அருள் செய்தவன் என்று சிவபரத்தின் பரத்துவத்தை விளக்கினார் அவ்வுருவிற்பாதி உகந்தவள் என்று இறைவியின் ஏற்றம் உரைத்தார். அவள் முலைக் கலசப் பாலினை உண்டு அழுதாய் என்று சம்பந்தப் பிள்ளையார். சிறப்பு உரைத்தார்." வேதமும் அங்கமும் ஆதிபுராணமும் மெய்த்தமிழ் நூல்களினுல் சோலைகள் எங்கும் விளங்க விரித்து" என்று அவர் திருப்பதிகம் பாடிய சிறப்பை உரைத்தார். ஓதுதல் இன்றி உணர்ந் தருள் பந்தன் என்று அவரது அருளறிவுச் சிறப்பை விளக்கியுரைத்தார். இச்செய்யுளில் அன்று தலக்கரி தாய் என்று இருப்பது தமக்கரிதாய் என்று இருக்க லாமோ என்று ஊகித்து உரை கூறப்பட்டுள்ளது.

லகர மகரங்கள் ஏட்டில் மயங்குதல் இயல்பேயாம். ஐந்தாம் செய்யுளில் உருள என்று சொல் நயம்படப் பொருத்தமுற ஐந்து முறை ஆளப்பட்டிருப்பது காண் கிறோம். இச்செய்யுள் பகழிக்கூத்தர் வாக்கை நினைப் பிக்கிறது. புத்தன் முடித்தலை உருள, நிலம் பொங்கு கருங்கலி நரர்கள் பிலக்குழிபுக்கு உருள, திருநீறு அருள் அது பெற்றது வார்பிணியாகவும் அப்படியுருள, நிலத் தில் ஆண்பனை பெண்பனை ஆகி அதிற் பழம் உருள, உலகு அஞ்ச இருட்டு எழுகோலம் உடைக் கொடி யோன் உருள உருட்டிய சேவகன் மைந்த உருட்டுக சிறுதேரே என்று வேண்டுகிறார். புத்தன் தலை உருண் டதும் சம்பந்தப்பெருமான் செய்த அற்புதமாம். கலி பாதலம் புக்கு ஒளித்தது அவர் சைவப் பயிர் வளர்த்த தால் விளைந்த பயனும். பாண்டியன் திரு நீறு பெற்ற அளவில் உடலில் உள்ளத்தில் இருந்த பிணி யனைத்தும் உருண்டது. சம்பந்தர் அருட்செயலேயாம். ஆக என்ற சொல் இங்கு அடைய என்பது போல் இனைத்தும் என்ற பொருளில் வந்தது ஆண்பனை பெண்பனை ஆகிப்பழம் நல்கியதும் அவர் செயலேயாய். மூன்றும் அடியில் மறைக்குருளை பயப்பட என்ற தொடர் மார்க்கண்டன் சிவத்தின் முன் தியானபரனாய் இருக்கும் போது எமன் வந்தானாக அவ்வருகை கண்டு அச்சிறுவன் அச்சங் கொண்டான் என்று உபசரிக்கின்றது. மறைக்குருளை என்று மிருகண்டு மைந்தன் உரைக்கப்படுதல் எவ்வாற் றானும் பொருத்தமேயாம். உலகு அஞ்ச இருட்டெழு கோலமுடைக் கொடியோன் என்றது தென்றிசைக் கோனைக் குறிப்பதாம். அவன் உருள உருட்டிய சேவ கன் சிவபரஞ்சுடராம். அவன் மைந்தன் சம்பந்தராம். இச்செய்யுளில் முன் வந்த எச்சம் எல்லாம் சம்பந்தர் செயல்களையே குறிக்க இறுதியில் அமைந்த உருள என்ற எச்சம் சிவபிரான் செயலைக் குறிப்பதாய் இருப்

பது சிந்திக்கத்தக்கது. முன் வந்த எச்சங்கள் எல்லாம் எந்த வினையைக் கொண்டு முடிய வேண்டுமோ அதே வினையை இவ்விறுதி யெச்சமும் தழுவுகிறது. ஆகவே ஐந்து எச்சங்களால் உணர்த்தப்பெற்ற செயல்களும் ஒரு கர்த்தாவையே சார்வது பொருத்தம் என்ற இலக்கண நெறி பற்றுவோமாயின் முன்பு உரைத்த சம்பந்தர் செயல் எல்லாம் அவர் செய்தன என்று உரைக்கப் படாமல் சிவன் செயலாகவே உரைக்கப்பட்டிருப்ப தாக உணர வேண்டும். சம்பந்தர் தம் தனியறிவு அற்ற சிவமய அறிவின் மூர்த்தியே ஆதலால் இங்ஙனம் கருது வது பொருத்தமாம். ஆறும் செய்யுளில் சந்தம் கருதி எல்லா நலமும் பிரமபுரத்தைத்தழுவும் படி வருணிக்கப் பட்டுள்ளன. இது முதல் ஐந்து செய்யுட்களும் சந்தச் சுவை கருதி மிகக்கடு நடையில் அமைந்துள்ளன. அவற்றின் உள்ளுறை சுருக்கமாக உரைக்கப்படும். எட்டாம் செய்யுளில் "விடமானது இட்டும் அழல் உறு நீறு வைத்தும் எதிரே உயர் ஆனை விட்டும், இவை பலி யாமல் மிக்க சிலையுறு தூணொடு ஒக்க விடுநாள் திரை யார் கடற்கரையில் இனிது ஏறும் அப்பர் துணை" என்ற தொடர் மொழியால் அப்பர் வரலாற்றுப் பகுதிகளை நன்கு விளக்குகிறார். ஒன்பதாம் செய்யுளில் சம்பந்தப் பிள்ளையார் பெருமை பலவாறு உரைக்கப்படுகிறது. சம ணர் 'சிவனே வெதுப்பு அகல விடுவான்' என இகழ்வு உரைக்கின்றாராம். அமுதாய் எழுகிற காவிரித்துறைவன் மகளார் (மங்கையர்க்கரசியார்) தம் ஒக்கலையில் இனி தாக எடுக்கின்றாராம். அரசாம் அவனே மதிக்கின்றா னும், அவனது முதுகூன் நிமிர்த்தும், அவன் அருநோய் தவிர்த்தும், திருவிளையாடல் செய்தாராம். அடியோம் அடியே துதிக்கும் வகை அருள் நீறு எமக்கு உதவும் அழகா அடைத்ததாள் திறக்கை பணியெனத்திருமறைக் காடுடையாரை நாவினுக்கரையனும் தமிழ் பாடிடக்

கண்ட பிள்ளையாம். மீண்டும் அக்கதவை முதற் பரவு சதுர்மறை நூல் அடைத்தபடியே சிவனே அடைத்தருள்க என ஓதிய கொச்சை முனியாம் திருமறைக்காட்டில் நிகழ்ந்த திருவருட்செயலை நன்குவிளக்கும் இச்செய்யுள் சந்தமும் சுவையும் பொருந்தியதேயாம். இறுதிச் செய்யுளில் சிவபிரான் திருச்சடையில் அலையார் புனலும் பிறையும், எருக்கும், அரவும் கடுக்கைமலரும் வெண்டலையும் விளங்கும் காட்சியை நன்கு அமைக்கிருர். அடுக்காக இவைகளை அமைத்தவண்ணமே தமிழ்க்கரசு நீர்நிலை, அதன் அருகே உள்ளமலர், மலரில் உள்ள வண்டு, வண்டின் அருகே நிழல், நிழலின் அருகே வளை, வளைக்கு அருகே மணி, மணிக்கருகு வெண்சிலையாக விளக்கமிடும் என்ற அமைப்பு மிகவும் அழகாய் உள்ளது.

இப்பிரபந்தம் சம்பந்தப் பெருமானை நாயகனுகை உடையது என்பது தெளிவாக அடிதோறும் சொற்ருேறும் எழுத்துத்தோறும் விளங்குமாறு அமைந்துள்ளது அமண்நெறி தலையெடுக்க ஒட்டாமல் எதிர்ந்து நிற்கும் திருப்பணியை அப்பருக்கு உற்ற துணையாக இப்பிள்ளையாரும் ஏற்றுக்கொண்டவரே ஆதலின் அச்செய்தி அடிக்கடி உரைக்கப்படுகின்றது. முருகனுக்குத் துணைவன் என்று ஒரு செய்யுளில் உரைக்கப்பட்டதாயினும் பல இடங்களில் முருகனே எனவும் இறைவன் இறைவி அருளிய குழவி எனவும் தெளிவாக உரைக்கப்பட்டுளது. புனிதவாய் மலர்ந்து அழுத அழுகையே உலகம் காக்க அமைந்த அருட் செயலாம் என்ற கருத்தானே பல மகுடங்களில் இவ்வருட் செயல் இடம் பெற்றுளது. காப்புப்பருவம் பதிஞெரு செய்யுளும் மற்றப்பருவங்கள் தனித்தனி பத்துச்செய்யுளும் கொள்ளவேண்டும் என்ற விதியை இவ்வாசிரியர் அறிந்திருந்தும் முத்தப்பருவத்தில்

ஒன்பது பாடலும் சிறுபறைப் பருவத்தில் ஒன்பது பாடலும் வாரானைப் பருவத்தில் பதினொரு பாடலும் அமைத்திருக்கின்றார். பருவங்களுக்குப் பத்துச் செய்யுள் வேண்டும் என்ற விதிக்கு மாறாக ஐந்தும் மூன்றும் ஒன்றுங்கொண்ட பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தங்கள் பின்னாளிலே தோன்றியுள்ளன. அவையும் பிள்ளைத்தமிழ் என்ற பெயரே பூண்டு தமிழுலகத்தே உலவத்தகுதி பெறும்போது இப்பிரபந்தத்தில் உள்ள இக்குறை பெரிதாக நினைக்கப்படாது.

சங்க காலத்தே செய்யுட்கள் அகம்புறம் என்ற நெறிபற்றியே சென்றன. சமண பௌத்த புலவர் காலத்தே அகவலாகவும் விருத்தமாகவும் காவியம் அமைக்கும் முறை தோன்றியது. மூவர்முதலிகளும் ஆழ்வார்களும் தமிழகத்தைத் தூயதாக்கிய காலத்தே தமிழ்மறை தாண்டவமாடியது. அதற்குப் பிற்பட்ட காலத்தே புராணங்களும் இதிகாசங்களும் விருத்த யாப்பிலே பாடப்பட்டன. கலிங்கத்துப்பரணி தக்கயாகப் பரணி என்ற இரண்டு பரணிகளும் தோன்றின. பிறகு சிறு பிரபந்தங்கள் பல முளைத்தன. அவற்றுள் அந்தாதி, கலம்பகம், பிள்ளைத்தமிழ் என்ற மூன்று வகையே தமிழ்ப் புலவரால் பெரிதும் கையாளப்பட்டன, கோவையும் மணிவாசகர் வழிகாட்டி யிருந்தாராயினும் அவர்க்குப்பின் பலர் துணிந்து இறங்காது நின்றது. கோவை மும்மணி நான்மணிமாலை முதலியனவும் ஆங்காங்கு தலையெடுத்தன. பிள்ளைத்தமிழ் வகையுள் தமிழில் இன்று நூற்றுக்குமேல் இருக்கும் என்று

துணிந்து உரைக்கலாம். பரணி ஐந்து ஆறுக்குமேல் இல்லை. கோவையும் பத்துக்கு உள்ளே இருக்கும். இப்பிரபந்த வகைகளை இந்நாளில் இயற்றுவாரும் இல்லை இயற்றுவாரை மதிப்பாரும் இல்லை, புதுமைப்பித்து தமிழ் மக்களைப் பிடித்து ஆட்டுகிறது. இந்த நிலையிலே இவ்வரிய பிள்ளைத்தமிழை உலகுக்கு உதவிய திருமடத்தைத் தமிழுலகம் வாழ்த்தாதிருக்க இயலாது.

ஸ்ரீ வெங்கடேஸ்வர் பிரஸ், கும்பகோணம்.

சிவமயம்.

ஆதீன வெளியீடுகள்.

1. முத்திபஞ்சாக்கர மாலை—பதவுரையுடன். 2-ம் பதிப்பு.
   பஞ்சாக்கர தேசிகர்மாலை- " "
2. ஞானபூசாவிதி—பழையவுரையுடன். "
3. நல்லூர் மாசிமகோற்சவ வைபவம். "
4. மண்ணிப்படிக்கரை ஸ்தலமகாத்மியம்.
5. காருண்யாமிர்த தீர்த்தமகிமை. "
6. இராமாயணதாற்பரியசங்கிரகம் உரையுடன்.
7. ஸ்ரீமாதவச்சிவஞானசுவாமிகள்மீது
   தோத்திரப்பா உரையுடன் (முதற்பாகம்)
8. சிவஞானபோதம்—சூத்திரமூலமும்உரையும்.
9. சித்தாந்தமரபு, சித்தாந்தமரபுகண்டனம்,
   சித்தாந்தமரபுகண்டனகண்டனம் குறிப்புடன்.
10. ஸ்ரீ நமச்சிவாயமூர்த்தி மும்மணிக்கோவை.
11. திருநெல்வேலித்தேவாரப்பதிகம் உரையுடன்.
12. ஸ்ரீமாதவச்சிவஞானசுவாமிகள்மீது
    தோத்திரப்பா உரையுடன் (2-ம் பாகம்)
13. சைவசமயம்.
14. பஞ்சாக்கரதேசிகர் அந்தாதி—உரையுடன்.
15. சித்தாந்தப் பிரகாசிகை—குறிப்புடன்

16. சுதந்திரத்திருநாள்.
17. கச்சி ஆனந்தருத்திரேசர் வண்டுவிடுதூது

—உரையுடன்.

டாக்டர், ஸ்ரீமத் உ. வே. சா.

18. திருச்செந்தூர்—கடற்கரை முருகர்கோயில் (ஆங்கிலம்)
19. ஞான சூடாமணி.
20. சிவஞானபோதம் (அச்சில்)

ஸ்ரீமாதவச் சிவஞானசுவாமிகள் சிற்றுரை.

21. சுவாமிநாத தேசிகர் பிரபந்தத்திரட்டு (அச்சில்)

---

22. பூப்பிள்ளையட்டவணை முதலியன.
23. சதமணிக்கோவை பொழிப்புரை.
24. திருவள்ளுவரும் பெரியபுராணமும்.
25. சமயம்.
26. திருச்சிற்றம்பலதேசிகர்கலம்பகம் உரையுடன்.
27. அத்துவிதவாக்கியத்தெளிவுரை.
28. சிவஞானபோதச்சூத்திரம் உரை.
29. திருஞானசம்பந்தர்பிள்ளைத்தமிழ் உரையுடன்.
30. சிவஞானசித்தியார் ஆராய்ச்சி (வேறுபதிப்பு)
31. திருப்பள்ளியெழுச்சி (வேறுபதிப்பு)
32. முத்திபஞ்சாக்கரமாலை முதலியன.
33. ஸ்ரீமாதவச்சிவஞானசுவாமிகள் பிரபந்தங்கள் 1
34, 35. துண்டுப்பிரசுரங்கள்.
36. திருவாவடுதுறையாதீனவரலாறு.

37. பாரததாற்பரியசங்கிரகம்உரையுடன்.
38. உலகுடையநாயனார்கழிநெடில்.
39. கலைசைப்பதிற்றுப்பத்தந்தாதி (மாதவ).
40. அம்பலவாணதேசிகர்நினைவுமலர்.
41. சந்தானாசாரியபுராணசங்கிரகம்.
42. சந்தானகுரவர்நான்மணிமாலை.
43. விநாயகரகவல்உரை.
44. திருவுந்தியார்உரை (மெய்கண்—1)
45. திருக்களிற்றுப்படியார்உரை (மெய்கண்—2)
46. கயிலைபாதிகாளத்திபாதியந்தாதியுரை.
47. நமச்சிவாயமூர்த்தி ஆற்றுப்படை (வேறுபதிப்பு)
48. சைவப்பேரரசு.
49. திருவஞ்சைக்களம்தேவாரம் உரை.
50. திருமந்திர சிந்தனை (நவாக்கரி).
51. வடதிருமுல்லைவாயிலந்தாதியுரை (மாதவ).
52. போலிவினாமறுப்பு.
53. சோமேசர்முதுமொழிவெண்பா மூலம்.
54. சிவஞானபோதம் பழையவுரை (மெய்கண்ட— 3)
55. திருக்கோகரணம் தேவாரம்உரை.
56. திருஞானசாகரம்.
57. இருபாஇருபது உரை (மெய்கண்ட—5)
58. துகளறுபோதம் பொழிப்புரை.
59. கந்தபுராணதத்துவம்.
60. சகலகலாவல்லிமாலை உரை.

61. திருவெம்பாவை பதவுரை-பொழிப்புரைகள்

62. திருப்பருப்பதம் தேவாரம்உரை.

63. திருவெம்பாவைக்கருத்துமுதலியன.

64. சிவபூசைத்திரட்டு.

65. சிவப்பிரகாசம் உரை (மெய்கண்ட—7)

66. திருஞானசம்பந்தர்பிள்ளைத்தமிழ் ஆராய்ச்சி

67. இரட்டையர் பிரபந்தங்கள் :—
தில்லைக்கலம்பகம், திருவாமாத்தூர்க்கலம்பகம்,
ஏகாம்பரநாதருலா முதலியன.

68. அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ் (மரதவ)

69. செம்பியன்மாதேவியார்

70. தொட்டிக்கலை —மதுரகவி—ஸ்ரீ சுப்பிரமணிய
முனிவர் பிரபந்தங்கள் (முதற்றொகுதி)

71. கவிராக்ஷஸ—ஸ்ரீ கச்சியப்பமுனிவர்
பிரபந்தங்கள் (முதற்றொகுதி)

72. ஸ்ரீ காசிகாண்டம் முழுவதும் மூலம்.

உ

சிவமயம்.

பிழையும் திருத்தமும்.

பக்கம்	வரி	பிழை		திருத்தம்
1.	23-	திருவாக்கின்று	—	திருவாக்கினின்று
12.	25-	சம்பந்தப்பிள்ளையாரைத்	—	சம்பந்தப்பிள்ளையாரை
13.	4-	செள்ள	—	கொள்ள
14.	29-	என்று	—	என்ற
16.	15-	காட்பலபிணி	—	காட்பல்பிணி
16.	16-	வாஞனை	—	வாணனை
,,	21-	கடல்அடைந்தவன்	—	கடல்அடைத்தவன்
,,	25-	புறச்சமயங்களை	—	புறச்சமயக் களை
29.	20-	கயற்தண்	—	கயற்கண்
,,	22-	வேண்டுதால்	—	வேண்டுதலால்
31.	23-	சந்பந்தரே	—	சம்பந்தரே
32.	22-	தலைக்கொண்டவர்	—	தலைகொண்டவர்
38.	24-	கோவைமும்மணி	—	மும்மணிக்கோவை,